பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 05 வெள்ளிக்கிழமை 19.05.2023 கதிர்190

## இனி து ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அடுத்த ஆட்டத்தை - ஒப்பிரேஷன் - தொடங்கிவிட்டார். பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்கவை அவரது பதவியிலிருந்து விலக்குவதற்கான நடவடிக்கையே அது.

அவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை மே 24 நாடாளுமன்றத்தில் விசாரணைக்கு வருகின்றது. இந்தத் தீர்மானம் வெற்றிபெறவேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கிறார். அதனை உறுதிப்படுத்துவதற்காக மூன்று அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

அமைச்சர்கள் விஜயதாசராஜபக்ச, பந்துல குணவர்த்தன, கெகலியரம்புக்வெல ஆகியோர் வெளிநாடு செல்வதற்கு அனுமதி கேட்டிருந்தார்கள். ஆனால் அதற்கு ☞2

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின்போது
# பொரளையில் குழப்பம் ஏற்படுத்தியது டான் பிரசாத் மற்றும் ஆதரவாளர்களே
### ஏற்பாட்டாளர்கள் குற்றச்சாட்டு

**கொழும்பு, பொரளைச் சுற்றுவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் குழப்பங்களை ஏற்படுத்தியவர் டான் பிரசாத் உள்ளிட்ட அவரது குழுவினர்களே என்று குறித்த அமைதியான நிகழ்வில் பங்கேற்றவர்களும், ஏற்பாட்டாளர்களும் தெரிவித்துள்ளனர்.**

**பொரளை சுற்றுவட்டத்தில் நேற்றுக் காலை 10.30மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு தொடங்கி இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது திடீரென அங்குவருகை தந்திருந்த இளைஞர்கள் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தவேண்டாம். எமது படையினர் குருதி சிந்திப்பெற்ற சுதந்திரத்தினைத் தரைவார்க்க வேண்டாம் என்று குரல் எழுப்பியதுடன், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் தள்ளுமுள்ளுப்பட்டனர்.**

**இதனையடுத்து, பதற்றமான சூழல்** ☞2





## வசந்த முதலிகே நேற்று களனியில் மீண்டும் கைது



அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக வியாழக்கிழமை மாலையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின்கீழ் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று களனி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், போராடத்தில் கலந்துகொண்ட மாணவர்கள், பொலிஸார் திட்டமிட்டே வசந்தமுதலிகேயை கைது செய்துள்ளதாக குற்றம் சாட்டினார்கள்.

களனி பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் உள்ளிட்டவர்களை விடுதலை செய்யக்கோரி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

## ஆளுநர் நியமனங்களை விமர்சிக்கவேகூடாதாம்

புதிய ஆளுநர்கள் மூவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களா என்று கேள்வி எழுப்பியுள்ள ஜனாதிபதியின் தொழிற் சங்கப் பணிப்பாளர் சமன் ரத்னப்பிரிய, திறமையானவர்களைசெயற்படுவதற்கு இடமளிக்கவேண்டுமே தவிரவும் விமர்சிக்கக்கூடாது என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் வியாழக்கிழமை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாடு நெருக்கடியில் இருக்கின்றபோதே பதவியைப் பொறுப்பேற்றிருந்தார். தற்போது நாட்டை நேரான தொரு வழிக்குக் கொண்டுவருவதற்கு அர்ப்பணிப்புடன்செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

இந்த நிலையில், மூன்று ஆளுநர்கள் ☞2

## ஜெரோம் போதகரின் கருத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரும் கண்டனம்

மதபோதகர்என அறியப்படும் ஜெரொம் பெர்னாண்டோ என்ற நபர் அண்மையில் தெரிவித்த பொறுப்பற்றதும் அவமரியாதையானதுமான கருத்துக்களுக்கு எமது வெறுப்பையும் அதிருப்தியையும் தெரிவிப்பதோடு, அதனை வன்மையாகக் கண்டிப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தூய பௌத்தத்தை உறுதியாக நம்பும் , பௌத்தத்தை நிலைநிறுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் பௌத்தராக அந்தப் போதகரின் கருத்து குறித்து நான் மிகவும் வருந்துகிறேன்.

நாட்டில் முன்னர் காணப்பட்டதை விட நல்லிணக்கம், சகோதரத்துவம், மனித நேயம் ஆகியவை வலுவாக கட்டியெழுப்பப்படவேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே இதுபோன்ற பொறுப்பற்ற கருத்துக்களால் மத ரீதியிலான மோதல்கள், வெறுப்பு, கோபம் போன்ற தீய எண்ணங்கள் அனைவர் மத்தியிலும் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

இலங்கை நீண்ட காலமாக தூய பௌத்தத்தால் போஷிக்கப்பட்டுள்ள நாடாகும். பௌத்தம் ஒரு உலகளாவிய கோட்பாடாகும். இது எந்த மதத்துக்கோ அல்லது தேசத்துக்கோ உரித்துடையதல்லாத ஒரு உலகளாவிய பொதுப் ☞2

## ஆளும் தரப்புக்கு நெருக்கமான குழுவே பொரளை நிகழ்வை குழப்ப முயற்சித்தது
### சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

பொரளை பொதுமயானத்துக்கு முன்பாக அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஆளும் தரப்புக்கு நெருக்கமான குழுவினரே குழப்புவதற்கு முயற்சித்தனர் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும் தரப்பில் உள்ளவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கொழும்பில் முன்னெடுப்படுவதை விரும்பியிருக்கவில்லை. இந்த நிலையில் ஆட்சியாளர்கள் ஒருசிலரை அனுப்பி அதனைக் குழப்புவதற்கு முனைந்துள்ளனர்.

இவர்கள் யார் என்பது தெளிவாகிறது. ☞2

## போதகர் ஜெரோமுக்கு எதிராக அடிபடை உரிமை மீறல் மனு

பிக்குகள் உள்ளிட்ட 6 மதத் தலைவர்கள் தாக்கல்

பௌத்த சமயம் உட்பட ஏனைய சமயங்களுக்கு அவதூறு ஏற்படும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ள கிறிஸ்தவ மதபோதகர் ஜெரோம் பெர்னாண்டோவை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி அவருக்கு எதிராக வழக்கு தொடர வேண்டுமெனக்கோரி எல்லே குணவங்சதேரர் உட்பட ஆறு மதத் தலைவர்கள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

எல்லேகுணவங்சதேரர், பெங்கமுவ நாலக தேரர், மௌலவிஹசன்மொஹமட், இராமநாதக் குருக்கள், அருட்தந்தை ஷிஹான் குரே ஆகியோர் நேற்றையதினம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

சட்டத்தரணி அசோகா நிவுன்ஹெல்ல ஊடாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த மனுவில் குற்றப் புலனாய்வுத் ☞2

## பல்கலை ஆசியர்களுடன் ஜனாதிபதி நேற்றுப் பேச்சு

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் உள்நாட்டுகடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்து நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்திதன் பின்னர் பல்கலைக்கழகவிரிவுரையாளர்கள் கோரும் நிதிச் சலுகைகள் உள்ளிட்ட வரப்பிரசாதங்கள் குறித்து ஆட்சியாளர்கள் பரிசீலிக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழகவிரிவுரையாளர்களுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்..

அதேநேரம், சகல பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி கல்விசார் ஊழியர் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டதுடன், தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுத்து, பல்கலைக்கழகக் கட்டமைப்பை பேணுவது மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு வழங்கப்படக்கூடிய தீர்வுகளைக் கண்டறிவதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும்.

பல்கலைக்கழகக் கட்டமைப்பிற்கு தேவையான வெற்றிடங்களை இனங்கண்டு அவற்றை நிரப்புவதுதொடர்பான ☞2

## மின் கட்டணக் குறைப்பு போதாது; ஏற்க மறுத்தார் ஜனக்க ரத்நாயக்க
### 3 வீதத்துக்குப் பதில் 27 வீதம் வழங்கலாமாம்

இலங்கை மின்சார சபையின் மின்கட்டணக் குறைப்புக்கான முன்மொழிவை ஏற்றுக்கொள்ள முடியாதென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் 66 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தை எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து 3.15சதவீதத்தினால் குறைக்க முடியும் என்று இலங்கை மின்சார சபை, பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்தமைக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இத்துடன், மின்சாரக் கட்டணம் தொடர்பில் உரிய முறையில் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டால் ஆகக்குறைந்தது 27சத வீதத்தினால் மின்சாரக் கட்டணத்தை குறைக்க முடியுமெனவும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ☞2

## எமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது இருந்தாலும் அரசைக் கவிழ்க்கோம்
### எஸ்.எம்.சந்திரசேன எம்.பி. தெரிவிப்பு

இந்த ஆட்சியில் தமக்கு அநீதிஇழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொது ஜன பெரமுனவின் அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

பொது ஜன பெரமுவின் தலைமையகத்தில் வியாழக்கிழமைநடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுநர், அமைச்சர்கள் நியமனங்களில் நாம் அதிருப்தி கொண்டுள்ளோம். பொதுஜன பெரமுவின் உறுப்பினர்களில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் சமகால நடவடிக்கைகள் தொஜுபில் அதிருப்தியைக் கொண்டுள்ளனர். அதற்காக அவர்கள் கட்சியியைவிட்டு வெளியேறி எதிரணியில் அல்லது சுயாதீனமாக அமர்ந்து ஆட்சியைக் கவிழ்ப்பதை நோக்காக கொண்டவர்கள் அல்லர்.

தற்போது நாடு சரியான பாதைக்கு திரும்பியுள்ளது. இந்த நிலையில் அதற்காகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் எமக்கில்லை. என்னுடன் பத்துக்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர்.

நாம் ஆட்சியைவிட்டு வெளியேறினால் நிலைமை மோசமாகிவிடும். அவ்விதமான நெருக்கடிகள் மீண்டும் ஏற்படுவதற்கு இடமளிக்கப் போவதில்லை - என்றார்.

### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்
## பெருந் தொகையைச் செலவு செய்து தவறான நீதிமன்றில் வழக்கு தாக்கல்
### குற்றஞ்சாட்டுகிறது சூழல் நீதிக்கான மையம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கையின் சுற்றுச் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கான இழப்பீட்டைப் பெற பெருந்தொகைப் பணத்தைச் செலவுசெய்து சிங்கப்பூரில் தவறான நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக சுற்றுச்சூழல் நீதிக்கான மையத்தின் தலைவர் கலாநிதி ரவீந்திநாத் தாபரே குற்றஞ்சாட்டுகிறார்.

சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் உள்ளிட்ட சில அமைப்புகள் ஒன்றிணைந்து எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்த முறைப்பாடு தொடர்பிலான விசாரணை வியாழக்கிழமை நடை பெற்றது. இதில் கப்பல் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் ஆணைக் குழுவில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன் பின்னர் சுற்றுச் சூழல் நீதிக்கான மையத்தின் தலைவர் கலாநிதி ரவீந்திநாத் தாபரே ஊடகங்களுக்குக் கருத்துவெளியிடுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞2

## பரீட்சைகளை ஒரே ஆண்டில் நடத்த முயற்சி

க.பொ.த சாதாரண தர மற்றும் க.பொ.த உயர்தர பரீட்சைகள் இரண்டையும் ஒரேவருடத்தில்நடத்துவதற்கு நடவடிக்கைஎடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில்பிரேம் ஜயந்த் தெரிவித்துள்ளதோடு. 7,800 கல்வியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு புதிய நியமனங்களை வழங்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவுள்ளது. விஞ்ஞானம், தொழிநுட்பம் போன்ற பாடங்களுக்காக ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு 35 வயதுக்குட்பட்ட பட்டதாரிகளுக்கு தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று காரணமாக நாட்டின் கல்விமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதுடன், பரீட்சைகளும் பிற்போடப்பட் டுள்ளது. இதனால் மாணவர்கள் பாதிக்கப்பபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றார்.

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஜனக்க ரத்நாயக்கவுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்படும்வரை அமைச்சர்கள் யாரும் வெளிநாடு செல்லவேண்டாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேபோன்று இராஜாங்க அமைச்சர்கள் அனைவரும் மே 24 கட்டாயம் நாடாளுமன்றத்தில் இருக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் ஜனாதிபதி குறியாக இருந்தாலும் அவரது ஆளும் கட்சியான பொதுஜனபெரமுன இது தொடர்பில் இரண்டாகப் பிளவுண்டுள்ளது. ஜனக்கவுக்கு எதிரான தீர்மானத்தைத்தான் ஆதரிப்பார் என்று கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் ஏற்கனவே அறிவித்திருந்தார். ஆனால் கட்சியில் மூத்த உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் அப்படிச் செய்ய முடியாது என்று போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

ஜனக்கவை நியமனம் செய்தது மொட்டுக் கட்சிதான். இப்போது நாமே அவரைப் பதவி நீக்கவேண்டும் என்பது சரியானதும் நியாயமானதும் அல்ல. அத்தோடு ஜனக்க மக்களுக்காகத்தான் குரல் கொடுக்கிறார். மின் கட்டண அதிகரிப்பால் மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதற்காகத்தான் அவர் போராடுகின்றார். அப்படிப்பட்ட நிலையில் அவருக்கு எதிராக வாக்களிக்க முடியாது.

இப்படி ஒரு தொகுதி மொட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்சவையும் நாமல் ராஜபக்சவையும் நேரில் சந்தித்துக் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். ராஜபக்சக்களிடம் இருந்து பதில் ஏதும் திட்டவட்டமாக அவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

இந்தப்பின்னணியிலேயே அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் யாரும் வெளிநாடு செல்லக்கூடாது என்று ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

.................

கொழும்பு மாநகர மேயராகப் பதவி வகித்தவர் ரோஸி சேனநாயக்க. கடந்த இரு மாதங்களில் அவரது உத்தியோகபூர்வ வாசல் தல மின் கட்டணத் தொகை 8 லட்சம் ரூபாய். சபை கலைக்கப்படுவதற்கு முன்னதான இரு மாதக் கட்டணம்தான் இந்தத்தொகை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தத் தொகையைச் செலுத்துவது என்று தற்போது ஆணையாளரின் கட்டுப்பாட்டில் இயங்கும் மாநகரசபை தெரிவித்துள்ளது. அப்படி என்னதான் செய்திருப்பார்கள்?

**இடி மின்னல்**

## பொரளையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டதோடு. பொலிஸாரும், கலகமடக்கும் படையினரும் இணைந்து நிலைமைகளைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

நினைவேந்தல் நிகழ்வைக் குழப்ப வந்திருந்த குழுவினரை டான் பிரசாத்தே வழியனுப்பினார். அவர்களை வழிநடத்தினார். இந்த விடயம் நிகழ்வில் தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நினைவேந்தலில் கலந்துகொண்ட அரசியல் செயற்பாட்டாளர் தரிந்து, டான் பிரசாத் போன்றவர்கள் தான் அன்று அரகலயவுக்கு எதிராகப் போராடினார்கள். தாக்கினார்கள். தற்போது உயிரிழந்தவர்களை நினைவுகூரும் போது அதனைக்கு தடுக்க முனைபவர்களும் அவர்களேதான். இதனை என்னென்று கூறுவது. அவர்களின் முட்டாள் தனமான சிங்கள தேசிய வாதம்தான் உள்ளது என்பது வெளிப்படையானது-என்றார்.

டான் பிரசாத் என்பவர் பொது ஜன பெரமுனவின் தீவிர ஆதரவாளர் என்று அறியப்படுபவர். காலி முகத்திடலில் நடந்த அரகலய போராட்டத்தின்போது, அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்து அலரிமாளிகைக்கு வந்த கூட்டத்தில் அவரும் இருந்தார். அந்தக்கூட்டத்தினர் அலரி மாளிகையில் மகிந்தவைச் சந்தித்துவிட்டுத் திரும்பும்போதே அரகலய போராட்டக் குழுவினர் மீது தாக்குதல் நடத்தினர். அதில் டான் பிரசாத் முக்கிய பங்காற்றியிருந்தார் என்று பொலிஸார் நீதிமன்றத்தில் சாட்சியங்களுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். இதற்காக அவர் கைது செய்யப்பட்டுமிருந்தார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதுபோன்று 2016 கொழும்பில் தவ்ஹித் ஜமாத் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தியும் தீவைத்து எரித்தும் கொல்வேன் என்று டான் பிரசாத் மிரட்டல் விடுத்திருந்தார். இது குறித்துச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

## ஆளுநர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமனத்தினை வைத்து ஐக்கிய தேசியக் கட்சி ஆளுநர்கள் பதவியில் அரசியல் செய்வதாக விமர்சனம் செய்யப்படுகின்றது.

சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியான திருமதி சார்ள்ஸ் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரா. செந்தில் தொண்டமான், லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் ஐ.தே.கவின் அங்கத்துவாகளா?

அவர்கள் கட்சிகளின் வேற்றுமைக்கு அப்பால் எதிர்காலத்தினைக் கருத்திற் கொண்டு கட்சி அரசியலுக்கு அப்பால் செயற்படுவதற்கு முன்வந்துள்ளார்கள். ஆகவே அதனை வரவேற்கவேண்டும்.

வெறுமனே ஜனாதிபதியை விமர்சிப்பதும், அவருடைய செயற்பாடுகளை விமர்சிப்பதும் பொருத்தமற்றது. எதிர்காலம் தொடர்பில் அவர் சிந்தித்து முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் எடுத்து அதில் பங்களிப்புச் செய்யவேண்டும் - என்றார்.

## ஆளும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்கம் தொடர்பில் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் தொடர்ந்து பேசிவருகிறது. ஆனால், ஆட்சியாளர்களுக்கு நெருக்கமான குழுவினரே இந்த நினைவேந்தல் நிகழ்வைக் குழப்புவதற்காக அனுப்பப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நெருக்கமானவர்களே இந்நிகழ்வை குழப்புவதற்கு வந்திருக்கிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது என்றார்.

## மின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரொஹான் செனவிரத்னவின் கையொப்பத்துடன் கடந்த திங்கட்கிழமை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில், வரவு, செலவு உள்ளிட்ட விடயங்களைக் கணிப்பிட்டு இந்த வருடத்தின் ஜூலை மாதத்தில் இருந்து டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் கிடைக்க வேண்டிய கட்டணத்தை பெற்றுக்கொண்டால், 20 பில்லியன் ரூபா இலாபம் கிடைக்கும். இதனால் ஜூலை மாதத்தில் இருந்து கட்டணத்தை 3.15 சதவீதத்தால் குறைக்க முடியும்

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் விசேட கவனம் செலுத்த வேண்டிய பிரிவினருக்கும் 28, 10 மற்றும் 7 சதவீத கட்டணக் குறைப்பை மேற்கொள்ள முடியும். அத்துடன், வழிபாட்டுத்தலங்களுக்கும் 19 அல்லது 9 அல்லது 7 சதவீத கட்டணக் குறைப்பை மேற்கொள்ள முடியும் என்றுள்ளது.

## பெருந் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும் சிரமத்திற்கு மத்தியில் 4.5 மில்லியன் டொலரைச் செலவுசெய்து, வெளிநாட்டுச் சட்ட வல்லுநர்களைத் தேடி, வெளிநாட்டுச் சட்ட நிறுவனங்களுக்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து, ஆகக்குறைந்தது எந்த நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது என்பதுகூடத் தெரியாமல் செயற்பட்டுள்ளது. தற்போது, குறித்த வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுவது தொடர்பில் ஆராயப்படுகிறது என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் பிரதிவாதிகள் 6 பேருக்கு எதிராக, சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் ஏப்ரல் 25 வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், குறித்த வழக்கு மே 15 விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், மீண்டும் அது தொடர்பிலான விசாரணை ஜூன் முதலாம் திகதி நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்த வழக்கை சிங்கப்பூர் சர்வதேச வணிக நீதிமன்றத்திற்கு மாற்றுவது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## போதகர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

அத்துடன், அம்மனுவில், ஜெரோம் பெர்னாண்டோ, புத்தர் மற்றும் பௌத்தம் மற்றும் பல மதங்களை அவமதிக்கும் வகையில் அண்மையில் நடைபெற்ற பிரசங்க கூட்டத்தில் பல கருத்துக்களை வெளியிட்டார்.

இந்தக் கருத்துக்கு பல்வேறு மத தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த அறிக்கைகளால், இனங்களுக்கு இடையில் பிளவு ஏற்பட்டு, தேசிய நல்லிணக்கம் சீரழிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை கைது செய்து விசாரணை நடத்தவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

## பல்கலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

வருடாந்தம் பல்கலைக் கழகங்களில் இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் தற்போதுள்ள கல்வி வசதிகள் போதுமானதாக இல்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தற்போதைய நிதி ஒதுக்கீடு வரம்புகளை முகாமைத்துவம் செய்து பல்கலைக்கழகக் கட்டமைப்பின் வசதிகளை மேம்படுத்துவது குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், மருத்துவ பீடங்கள், பொறியியல் பீடங்கள் மற்றும் விஞ்ஞான பீடங்களின் வசதிகளை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தினார்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆய்வுக் கொடுப்பனவை மீள வழங்குவது தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்துரையாடி தீர்மானம் எட்டுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

நாட்டின் பல்கலைக்கழகக் கல்வி தொடர்பில் தீர்மானம் எடுக்கையிலும் கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்கையிலும் நவீன உலகிற்கு ஏற்றவாறு முறையான ஆலோசனைகளைப் பெற வேண்டியதன் அவசியம் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

## ஜெரோம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனையாகும்.

வெறுப்புக்குப் பதிலாக பரிவையையும், அவமரியாதைக்குப் பதிலாக மரியாதையையும் அனைத்து உயிரினங்களிடமும் கருணை காட்டவும் உலகிற்கு கற்பித்த ஒரு கோட்பாடாகும்.

பௌத்த மதத்தின் இணக்கமான ஏற்பாடுகளே பிற மதங்களை மதிப்பதற்கும், அவற்றைப் பின்பற்றுவதற்கான இடத்தை வழங்குவதற்கும் தற்போது வழிவகுத்துள்ளது என்பது வலியுறுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதனை சந்தர்ப்பவாதமாகப் பயன்படுத்தி பல்வேறு நபர்களும் குழுக்களும் பௌத்தத்தைக் குறிவைத்து தவறான கருத்துக்களை வெளியிடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை.

மேற்கூறப்பட்ட மத போதகரால் குறிப்பிடப்பட்ட கருத்து எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிடக் கூடியவையல்ல. எனவே இதன் பின்னனியிலுள்ள சூழ்ச்சி என்ன என்பதை வெளிப்படுத்துவது அவசியம். இது போன்று கருத்துக்களை முன்வைப்பவர்களுக்கு எதிராக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டியது அரச பொறிமுறை சார்ந்த பொறுப்பாகும். இது தொடர்பில் முழு நாடும் உன்னிப்பாக அவதானம் செலுத்திவருகிறது - என்றார்.










# டெங்கு ஒழிப்பு தொடர்பாக ஊவாவில் கலந்துரையாடல்



டெங்கு ஒழிப்பு தொடர்பான மாகாண செயற்குழுக் கூட்டம் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் வியாழக்கிழமை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, மாகாணத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான பாதுகாப்பு முறைமை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடியதுடன், ஊவா மாகாணத்தை டெங்கு அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்க எடுக்கப்படவேண்டியநடவடிக்கைகள் தொடர்பாகவும் அதிகாரிகளுக்கு ஆளுநர்ஆலோசனைவழங்கினார்.

நுளம்புகள் பெருகும் இடங்களைச் சோதனை செய்து சுத்தம் செய்வது தொடர்பில் அரச நிறுவனங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பிற நிறுவனங்களின் பிரதானிகளும் தெளிவூட்டல், நகர்ப்புறமற்றும்கிராமப்புறங்களில் உள்ள அனைத்து வீடுகள் மற்றும் கடை வளாகங்களைச் சோதனை செய்தல், ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிப்புக்களை வழங்குதல், டெங்கால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்கள் வசிக்கும் பிரதேசத்தில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை அழித்தல், இடங்களைக் கண்டறிந்து கொசுப்புழுக்களை அடையாளம் காணல், வீடுகள் மற்றும் நிறுவன வளாகங்களைச் சுத்தமாகப் பராமரிக்கத் தவறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்து டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

அதேவேளை டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் வெற்றியடையச் சுகாதார திணைக்களத்தின் தலையீடு மட்டும்போதாது எனவே, மக்களின் ஆதரவும் தேவை எனச் சுகாதார அதிகாரிகள் மேலும் வலியுறுத்துகின்றனர்.

இந்த கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர் ஆர்.எச்.சி.பிரியந்தி, பதுளை மற்றும் மொனராகலை மாவட்டச் செயலாளர்கள், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள், மாகாண சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், 112 படைப்பிரிவுகளின் பிரதானி, தியத்தலாவ விமானப்படையின் கட்டளையிடும் அதிகாரி உள்ளிட்ட அரசநிறுவனங்களின்பிரதானிகள் கலந்துகொண்டனர். (5)

# தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது!

பெலியத்த மற்றும் வத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இருவரை கூரிய ஆயுதங்களால்தாக்கிகொலைசெய்த இருவர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி பெலியத்த பொலிஸ்பிரிவுக்குஉட்பட்டபகுதியில் நபர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிகொலைசெய்தசம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்மாத்தறைபொலிஸ் பிரிவுக்குட்பட்டவெரதுவபிரதேசத்தில் வைத்து குற்றத்தடுப்புபிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானநபர் 33 வயதுடைய கலகம கிழக்கு, நாகுளுகமுவ பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார்.

குடும்பத்தகராறு காரணமாக இந்த கொலை இடம் பெற்றுள்ளதாகவும், இந்த தாக்குதலின் போது உயிரிழந்தவர் சந்தேக நபரின் உறவினர் என்பதுடன், தாக்குதலை மேற்கொண்டுவிட்டு குறித்த நபர் தலைமறைவாகி இருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சந்தேக நபர் தங்கல்ல நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு, இந்தச் சம்பவம் தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெந்தலை பகுதியில் உள்ள மர ஆலையொன்றில் நபர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், குறித்த சம்பவத்துடன்தொடர்புடையசந்தேக நபர்பிலியந்தல,பொல்கஸ்ஓவிட்ட பிரதேசத்தில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் 44 வயதுடைய கரவினாடிய, பலங்கொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

உயிரிழந்தவரும் சந்தேக நபரும் குறித்த மர ஆலையில் ஒன்றாக பணி புரிந்துள்ளதுடன் இவர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறுகாரணமாகஇந்தத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைகளில்தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்வெலிசரநீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் என்பதோடு, வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமையும்குறிப்பிடத்தக்கது. (5)

# திருடப்பட்ட மோ. சைக்கிள் காத்தான்குடியில் மீட்பு!



அக்கறைப்பற்றில் களவாடப்பட்ட 8 லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூநொச்சிமுனையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்தத் திருட்டுச் சம்பவத்தோடு தொடர்புடையநபரொருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் காத்தான்குடி பொலிஸ்நிலையகுற்றத்தடுப்புபிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் விசேட பணிப்பின்பேரில்நாடுமுழுவதிலும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனைநடவடிக்கைகளின்போது, காத்தான்குடி பொலிஸார் பூநொச்சிமுனை உள்வீதியில் நடத்தியதிடீர் சோதனையில் இந்த மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் எதுவுமின்றி காணப்பட்டதால் பொலிஸார் அதனை மீட்டதுடன், திருட்டுக் குற்றச் செயலோடு தொடர்புடையநபரொருவரையும் கைதுசெய்துள்ளனர்.

கண்டுபிடிக்கப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள் குறித்த தகவல்களை நாட்டில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் காத்தான்குடி பொலிஸார் அறிவித்திருந்ததை அடுத்து, குறித்த வாகனம்அக்கரைப்பற்றுபகுதியில் களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் தான் என்பதை அக்கரைப்பற்று பொலிஸார்உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதன்போது கைதான சந்தேக நபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5)

# முள்ளிவாய்க்கால் நினைவு மட்டக்களப்பில் நிகழ்வுகள்






மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் மே 18 முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் இறுதி நாள் நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

அந்தவகையில் கிரான் சின்னவெம்பு கிராமத்தில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களின் உறவுகளும்தமிழர் தாயக மக்களும் இணைந்து வியாழக்கிழமைகாலைஇவ்நினைவு தினத்தை நினைவு கூர்ந்தனர்.

இதன்போது உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து அக வணக்கம் செலுத்தப்பட்டு ஈகைச் சுடர்ஏற்றியதுடன்மலர்அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் உயிர் நீத்தவர்களின்நினைவாகதென்னங் கன்றுகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் தமிழர் தாயக மக்கள் அமைப்பின் இணைப்பாளர் குருசுமுத்து வி.லவக்குமார் முள்ளி வாய்க்காலில் உயிர்நீத்தவர்களின் நிவைவேந்தல் தொடர்பாக உரையாற்றினார். (5)



# தந்தையால் 19 வயது மகள் துஷ்பிரயோகம் மஸ்கெலிய பொலிஸால் சந்தேகநபர் கைது!

தனது19வயதானமூத்தமகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவம்தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரானதந்தைஒருவருக்குஎதிராக ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் மஸ்கெலியாபொலிஸார்அறிக்கை பதிவிட்டுள்ளனர்.

பாலியல்துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாக கூறப்படும் மகள், தனது தந்தை அடிக்கடி தன்னை தாக்கி காயப்படுத்துவதாக மஸ்கெலியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரான தந்தையைகைது செய்த மஸ்கெலியா பொலிஸார், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதன் பின்னர் விளக்கமறியலில் வைக்குமாறுஉத்தரவிட்டுள்ளனர். (5)

# பிலியந்தலையில் பாடசாலை வானுக்குள் வைத்து மாணவி பாலியல் துஷ்பிரயோகம்!

பிலியந்தலையில் வான் ஒன்றுக்குள் வைத்து ஆறு வயது ஒன்பது மாதமான பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பாடசாலை வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட மாணவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாணவியை பாலியல் வன்கொடுமை செய்வதற்கு முன்பு மாணவியின் முகத்தில் எதனையோ தெளித்துவிட்டு மயக்கமடைய செய்த பின்னர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டார் எனக் கூறப்பட்டாலும் விசாரணையில் அது உறுதிசெய்யப்படவில்லைஎன்றும் பொலிஸார் தெரிவித்தனர்.இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (5)

# மாணவியரின் நிர்வாண படங்களை பெற்ற 19 வயது மாணவன் கைது!

தனக்கு மொடல் அழகிகள்தேவைப்படுவதாகத் தெரிவித்து வட்ஸ்அப் குழுமத்தில் தகவல் அனுப்பியமைதொடர்பில் 19 வயதானமாணவர்ஒருவரை குற்றவியல் விசாரணை திணைக்கள கணினி குற்ற விசாரணைபிரிவுஅதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இந்த தகவல் ஊடாக குறித்த மாணவன் 16 மாணவியரின் நிர்வாண புகைப்படங்களை பெற்றுக்கொண்டுள்ளமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த மாணவர் மினுவாங்கொடை பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி கற்பகிறார்எனவும்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மினுவாங்கொடை, நீர்கொழும்பு, கம்பஹா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவியரின் நிர்வாணப்படங்களேசந்தேக நபரான மாணவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. (5)




காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வரவேற்கத்தக்க மாற்றம்

**போர் முடிந்து 14 ஆண்டுகளின் பின்னர் ஒரு சிறு மாற்றமாக இம்முறை கொழும்பிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெற்றுள்ளது. ஒரு சிறு நிகழ்வு, முழுமையாகத் திறம்பட ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வல்ல என்றபோதும் போரில் அப்பாவிகள் கொல்லப்பட்டார்கள் என்பதை சிங்கள மக்களுக்கும் நினைவூட்டக்கூடிய ஒரு சிறு வெளி திறக்கப்பட்டிருப்பது வரவேற்கப்படவேண்டிய மாற்றம்தான்.**

**கடந்த ஆண்டு அரகலய ஏற்படுத்திய மாற்றத்திலிருந்து இந்த முன்னேற்றம் நிகழ்ந்திருக்கிறது. 2022 மே 18 நினைவேந்தல் அரகலய அரங்கில் எதிரொலித்தது. ஒரு மாற்றத்தை வேண்டி நின்ற தெற்கு மக்கள் கூட்டம் தமிழ் மக்களின் குரலையும் கொஞ்சம் செவிசாய்த்துக் கேட்கத் தயாரான பொழுது அது.**

**அரகலயவின் அந்தப் போராட்டம் ஆட்சியாளர் மாற்றத்தை ஏற்படுத்தியதுடன் எதிர்பாராத விதமாக முடிவுக்கு வந்த நிலையில், தமிழ் மக்களின் குரல்களையும் கேட்க வேண்டியிருக்கிறது, போர் வெற்றிக்குப் பின்னால் கூர்ந்து அவதானிக்க வேண்டியவைகள் பல இருக்கின்றன என்பதைச் சிங்கள மக்களுக்கு உணர்த்தும் தொடர்ச்சியாக அரகலய ஏற்படுத்திய மாற்றம் இந்த ஆண்டும் தொடர்ந்திருப்பது உண்மையான மாற்றம்தான்.**

**ஏனெனில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைகள், போர், சாவுகள், அழிவுகள், துன்பங்கள் என்பவற்றை உலக அரங்கில் பேசுவதற்கு முன்பாக சிங்கள மக்களிடம் பேச வேண்டியது முக்கியம். அந்த விடயத்தில் இதுவரையில் தமிழர்கள் மிகப் பலவீனமானவர்களாகவே இருக்கின்றனர். அரசு இயந்திரத்தின் முன்பாக, அதன் அசுரத்தனமான அதிகாரத்தின் முன்பாக, அதன் பரப்புரை இயக்கத்தின் முன்பாக, அதிகாரமற்ற மக்கள் கூட்டத்தினரான தமிழர்கள் சிங்கள மக்களிடம் தமது துன்பத்தைத் துயரத்தை எடுத்துச் சொல்வதென்பது சாதாரணமானதல்ல.**

**இதுவரை காலமும் அதற்கான வெளியை ஏற்படுத்தவிடாது மிக இறுக்கமான நிலைப்பாட்டை கொழும்பு ஆட்சிகள் கொண்டிருந்தன. இப்போது அதில் ஒரு சிறு விரிசலையாவது ஏற்படுத்த முடிந்திருப்பது அரகலய ஏற்படுத்திய உண்மையான மாற்றம் என்பது வரவேற்கத்தக்கது. இந்த மாற்றத்தைத் தமிழ்ச் சமூகம் நன்கு பயன்படுத்திக்கொண்டு தனது நீதி கோரிம் நிலைப்பாட்டை, அரசியல் கோரிக்கைகளைச் சிங்கள மக்களிடம் இன்னும் பரந்தளவில் எடுத்துச் செல்வதற்கு முழு முயற்சிகளையும் செய்யவேண்டும். வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் இது விடயத்தில் செயற்படுவதிலும் பார்க்கப் பல மடங்கு அதிகமாக சிங்களப் பகுதிகளிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் செயற்படவேண்டியிருக்கிறது.**

**இது ஒரு பெரும் பணி. இந்தப் பணியை ஆற்றவேண்டியது வரலாற்றுக் கடமை. இதனை ஆற்றாமல், சிங்கள மக்களின் மனங்களில் மாறத்தை ஏற்படுத்தாமல் தமிழர்கள் எதிர்பார்க்கும் தீர்வு ஒருபோதும் சாத்தியமாகப்போவதில்லை. எனவே இந்த மாற்றத்தைப் பயன்படுத்தி அந்த மன மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தம்மாலான அனைத்து முயற்சிகளையும் தமிழ்ச் சமூகம் மேற்கொள்ளவேண்டும். முள்ளிவாய்க்காலை சிங்கள மக்களிடம் கொண்டு சென்று அதன் நியாயத்தை அவர்களையும் ஏற்கச் செய்வதுதான் அடுத்த 10 ஆண்டுகளில் தமிழர்கள் செய்யவேண்டிய மிகப் பெரும் பணியாக இருக்கும். அது பெரும் பொருட்செலவையும் கோரி நிற்கக்கூடியது என்பதால் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும் இது தொடர்பில் திட்டமிட்டுச் செயற்படுவது அவசியம்.**

# நாட்டில் போர் முடிவுக்குப் பிறகு கடந்துவிட்ட 14 வருடங்களில் நிறைவுசெய்யப்படாத பணி

## சமாதானப் பேரவை தெரிவிப்பு

சுமார் மூன்று தசாப்த காலமாக நீடித்த போரினது முடிவின் 14ஆவது வருட நிறைவை (மே 18) நாடு நினைவுகூர்ந்து வருகிறது.

இரத்தக்களரியில் முடிவடைந்த போர், மக்களின் வாழ்வில் தொடர்ந்தும் அதன் தாக்கத்தை செலுத்திக்கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள், மாண்டுபோன தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செய்துகொண்டிருக்கின்ற அதேவேளை, மேலும் ஆயிரக்கணக்கான குடும்பங்களை சேர்ந்தவர்கள் காணாமல்போன தங்கள் அன்புக்குரியவர்கள் விரைவில் திரும்பிவருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வழமைபோன்று அரசாங்கம் போர் வெற்றியைக் குறிக்கும் விதமாக மே 19 நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருக்கிறது. இது நாட்டின் பெரும்பான்மையினரது உணர்வுகளை பிரதிபலிப்பதாக அமைகிறது.

போர் முடிந்துவிட்ட போதிலும், அதற்கு வழிவகுத்த பிரச்சினைகளும், அவற்றில் இருந்து தோன்றுகின்ற புதிய பிரச்சினைகளும் தொடர்ந்து தொல்லைகொடுத்துக்கொண்டிருப்பதுடன், நாடு அதற்கு இருக்கின்ற ஆற்றல்களை பயன்படுத்தி முன்னேறுவதற்கு குந்தகமாக அமைகின்றன.

நாடு தொடர்ந்தும் பிளவுபட்ட ஒரு குடும்பத்தைப் போன்றே காணப்படுகிறது. பிளவுகளை குணப்படுத்தாத வரை நாடு வெற்றிபெற முடியாது. பிளவுகளை காணப்படுவதற்கு உண்மையான இணக்கப் போக்குடைய, இலங்கையை உருவாக்கும் நோக்குடைய, ஓர் அரசியல் ஞானிக்குரிய பண்புகளைக் கொண்ட தலைமைத்துவம் தேவை.

காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினையை கையாள்வது நிறைவு செய்யப்படாத, மிகவும் அவசரமான பணியாக இருக்கிறது.

மக்களின் உணர்வுகளை திருப்திப்படுத்தக்கூடிய முறையில் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். தங்களது கவலை குறித்து அரசு அக்கறை செலுத்தி நீதி கிடைக்கச் செய்யவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அரசமைப்பின் பிரகாரம், அதிகாரப்பரவலாக்கத்துக்கான மாகாண சபைகள் முறைமை முழுமையாக நடை முறைப் படுத்தப்படுவதை உறுதிசெய்வது இரண்டாவது முக்கியமான பணியாகும்.

மாகாண சபைகளுக்கு போதுமான நிதி வளங்கள் கிடைக்கச்செய்யப்பட வேண்டும். மக்களின் பிரதிநிதித்துவத்துக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை உறுதி செய்யும் விதமாக மக்களால் தெரிவுசெய்யப்படும் மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படக்கூடியதாக ஆளுநர்களின் அதிகாரங்களை குறைப்பதற்கு மாகாண சபைகள் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதும் அவசியமாகும். நிறைவுசெய்யப்படாத வேறு பணிகளும் இருக்கின்றன. ஆனால், மேற்கூறப்பட்ட இரு பணிகளையும் கையாள்வதற்கு உண்மையான அக்கறை இருக்குமானால், ஏனைய பணிகளை தன்பாட்டில் தொடரமுடியும்.

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை தோற்றுவிப்பதற்காகவும், சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார தடைகள் விதிக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் அதிகரிப்பதை தடுக்கவும் இந்த பணிகளை அவசரமாக முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

சர்வதேச தடைகள், போர்க் குற்றங்களை செய்ததாக குற்றஞ்சாட்டப்படுபவர்கள் மீதான பயணத்தடைகளின் வடிவில் ஏற்கெனவே பிரச்சினை கொடுக்கத் தொடங்கிவிட்டன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் பொருளாதாரச் சலுகையை பாதுகாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகளுடன் நேரடியாக பேச்சுகளை ஜனாதிபதி ஆரம்பித்திருப்பதை தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது.

இந்த பேச்சுகள் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் நேர்மறையான வரவேற்பை பெற்றிருக்கின்றன. இந்நிலையில், முஸ்லிம் மற்றும் மலையக தமிழ் அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி பேச்சுகளை ஜனாதிபதி விரிவுபடுத்தவிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இவை தொடர்பில் தனது நோக்கங்களை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும், இந்த விவகாரத்தில் எதிரணி அரசியல் கட்சிகளுடனும் பேச்சுகளை அவர் ஆரம்பிக்கவேண்டும் என்றும் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம். அவ்வாறு செய்தால்தான் காணப்படக்கூடிய இணக்கப்பாடுகள் சகல தரப்புகளையும் அரவணைப்பதாகவும் நாட்டின் சகல இன, மத சமூகங்களின் உச்சபட்ச ஆதரவை பெறக்கூடியதாகவும் இருக்கும். (5)

# ஜனாதிபதியின் தலைமைத்துவம் சிறந்தது என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்!

## ஜானக வகும்பர தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சிறந்தது என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் வெகுவிரைவில் அரசாங்கத்துடன் ஒன்றிணைவார்கள் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்பர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் முன்னெடுத்த கடுமையான தீர்மானங்கள் வெற்றிபெற்றுள்ளன.

பாரிய நெருக்கடியில் இருந்து நாடு குறுகிய காலத்துக்குள் மீண்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சிறந்தது என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுவதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது. கட்சி என்ற ரீதியில் ஒன்றிணைந்து செயற்படுகிறோம்.

புதிய ஆளுநர் நியமன விவகாரத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் பேச்சில் ஈடுபடவில்லை. எமக்கு சார்பானவரை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் குறிப்பிடவுமில்லை. ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அதனடிப்படையில் சிறந்த தகுதியானவர்களை நியமித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் ஒன்றிணைவார்கள். அமைச்சரவை அமைச்சுக்களை விரிவாக்கும் சாத்தியம் ஏதும் தற்போது கிடையாது. இருப்பினும் இராஜாங்க அமைச்சுக்கள் விரிவுபடுத்தப்படலாம். - என்றார். (5)

# இலங்கையின் அனர்த்த முகாமைத்துவத் துறையை உலக தரத்துக்கு அபிவிருத்தி செய்ய நடவடிக்கை!

உலகளாவிய தரத்துக்கு ஏற்ப அனர்த்த முகாமைத்துவத் துறையை அபிவிருத்தி செய்ய திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு படையணியின் உயர்மட்ட தூதுக்குழுவுடன் புதன்கிழமை அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ மையத்தை அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய தரத்துக்கு ஏற்ப அனர்த்த முகாமைத்துவத் துறையை அபிவிருத்தி செய்ய விரும்புகிறோம்.

எனவே பேரிடர்களால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு ஆதரவளிக்கும் உலகளாவிய பதிலளிப்பாளராக பேரிடர் முகாமைத்துவ நிலையத்தை உருவாக்க உத்தேசித்துள்ளோம். இதற்கு முன்னுரிமையளித்துள்ளோம் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிவில் - இராணுவ ஒருங்கிணைப்பை மேம்படுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள இராஜாங்க அமைச்சர், இலங்கை இராணுவத்தை சரியான அளவில் பேணுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் செயல்திறனை அதிகரிக்க புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றுவதன் முக்கியத்துவத்தையும் அவர் இதன் போது வலியுறுத்தியுள்ளார்.

அனர்த்தநிலைமைகளின் போதான பயிற்சி மற்றும் உடன் பதிலளிப்புக்கள் என்பவற்றுக்கு அமெரிக்கா உதவும் என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு படையணியின் தலைமையதிகாரி மேஜர் ஜெனரல் ஜோன் பீ ரொனெக் தெரிவித்துள்ளார்.




சேதத்தைக் குறைக்க கட்டடக் குறியீட்டை உருவாக்குவதன் முக்கியத்துவம் மற்றும் கையடக்க தொலைபேசிகள் மூலம் எச்சரிக்கை கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து இதன் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (5)

# கிழக்கின் புதிய ஆளுநர் சமய வழிபாட்டு நிகழ்வில்!

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட செந்தில் தொண்டமான் நேற்று (வியாழக்கிழமை) காலை திருகோணமலையிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள, கிறிஸ்தவ மதஸ்தளங்களுக்குவிஜயம்செய்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கிழக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவால் புதன்கிழமைபுதிதாகநியமிக்கப்பட்ட செந்தில் தொண்டமான் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணியளவில்தனதுகடமைகளை பொறுப்பேற்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)







# காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியின் க.பொ.த(சா/த) மாணவர் தின நிகழ்வுகள்

கல்முனை கல்வி வலய காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியின்க.பொ.த(சா/த)மாணவர் தின நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.சுந்தரராஜன் தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) கல்லூரியின் ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாககல்முனைவலயக்கல்வி அலுவலகத்தின் கணக்காளரும், பிரபல வளவாளருமான வை.ஹபிபுல்லா கலந்துகொண்டு சிறப்பித்தார்.மேலும்இந்தநிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக்கல்விஅலுவலகத்தின்பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) வரணியா சந்தரூபன், காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜே.டேவிட் , பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளர் எல்.சுலக்சன் உட்பட பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விசார உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இம்முறை க.பொ.த.(சா/த) பரீட்சை எழுதும் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் பரிசளிப்புநிகழ்வும்இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழுங்கல்!



முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் வாரத்தின் இறுதி நாளான நேற்று (வியாழக்கிழமை) தமிழ்த் தேசியப்பசுமைஇயக்கத்தால் யாழ்ப்பாணத்தில் அதன் தலைமை அலுவலகத்தின் முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சிகாய்ச்சிபரிமாறப்பட்டது.

இறுதிப்போரில் புதுமாத்தளனில் தனது கணவரைப் பலி கொடுத்த திருமதி தக்ஸாயினிஅருள்நேச யோகநாதன் அஞ்சலி சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியதைத் தொடந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ .ஐங்கரநேசன் , பொதுச் செயலாளர் ம.கஜேந்திரன் , துணைப் பொதுச் செயலாளர் சண்.தயாளன் , பொருளாளர் க.கேதீஸ்வரநாதன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.





ஏராளமானோர் முள்ளிவாய்க் கால்கஞ்சியைஉணர்வுடன்அருந்திச் சென்றமையைக் காணமுடிந்தது. (5)




# துப்பாக்கி அனுமதிப் பத்திரம் வழங்க அமைச்சு தீர்மானம்

## விவசாயிகளுக்காக

விவசாயத்தின்போது விவசாய பயிர்களின் பாதுகாப்புக்காக துப்பாக்கி அனுமதிப்பத்திரத்தைவழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.



பயிர்களின் பாதுகாப்புக்காக துப்பாக்கிகளை பாவிப்பது தொடர்பில் முன்னர் காணப்பட்ட சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்காக கொண்டிருக்கவேண்டியபயிர்ச்செய்கை நிலப்பரப்பின் அளவை 5 ஏக்கர் வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

ஒருவருடத்துக்குள் வன விலங்குகளால் பாரியளவில் பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக காலத்துக்கு ஏற்றதாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் விவசாயத்தை மேம்படுத்துவதற்கும், விவசாயிகளின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காகவும், நாட்டின் உணவுப் பாதுகாப்புக்காக எடுக்கப்படும்முற்போக்கானவேலைத் திட்டங்கள்தொடர்பில்அரசாங்கத்தால்அவதானம்செலுத்தப் பட்டுள்ளது.

இலங்கையின் நுகர்வுக்குத் தேவையான பொருள்களை நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கும், நாட்டின் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும் விவசாயிகளுக்கு பலமான கரங்களைவழங்குவதற்கான பின்னணியை உருவாக்குவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

பயிர் பாதுகாப்புநடவடிக்கைகளுக்கு துப்பாக்கிப் பாவனை தொடர்பிலான மேலதிக விவரங்களை அந்தந்த மாவட்ட செயலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார். (5)



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்விழி நயனம்

# நன்றி மறவாமை

இந்த பரந்து விரிந்த உலகிலே மனிதப்பிறவிஎன்று கூறுவது ஓர் புனிதமான விடயமாகும். அதிலும் மேலாக இந்தப் பிறவியைப் பெறுவது மிக அரித என்கிறார் ஔவையார், அதாவது

அரிது அரிது மானிடராதல் அரிது
அதனிலும் அரிது
கூன் குருடு செவிடு பேடு நீங்கிப்
பிறத்தல் அரிது.

என்று கூறுகிறார;



ஔவையார் இவர் அரிதாக கருதத்தக்க இவ் மானிடப்பிறவியைப் பெற்ற நாங்;கள் திகவும் சிறப்பானவர்கள் ஆவோம். ஆகவே இவ் சிறப்பு மிக்க மானிடப்பிறவியில் மானிடர் எங்களுக்கு பல குணங்கள் காணப்படுகின்றது. மேலும் பல பழக்க வழக்கங்கள், எண்ணங்கள், உயர்வு தாழ்வு என பல விடயங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பழக்கவழக்கங்கள், எண்ணங்கள் குணங்கள் போன்றவையே ஓர் மனிதனைப் பற்றியும் அவனது பண்பு பற்றியும் அறிய உதவும் கருவியாக அமைகின்றது. அவ்வாறான நற்குணங்களாக உதவி செய்தல், கர்மம் செய்தல் என பல வகைகள் உண்டு. நாம் ஒருவருக்கு செய்யும் நன்மையே உதவியாக அமைவது மட்டுமன்றி அவருக்கு செய்யும் தீமை உதவியாக அமையாது. மற்றும் அவருக்கு செய்யும் நன்மையைத் தவிர அவருக்கு செய்யாதிருக்கும் தீமையும் உதவியாகஅமைவனவாககாணப்படுகின்றது அவ்வாறான நற்பண்புகளில் ஒன்றான செய்த நன்றியை மறவாதிருத்தல் பற்றி ஓர் தெளிவான விரிவுரையை நூற்று முற்பத்து மூன்று அதிகாரங்களைக் கொண்ட ஏடாகிய திருக்குறள் என்பதிவ் இவ் செய்நன்றி என்ற விடயத்திற்கு ஒரு அதிகாரத்தை ஒதுக்கீடு செய்துள்ளார். திருவள்ளுவர் என்பவர் பல நூற்றாண்டு காலகட்டத்திற்குமுன்வாழ்ந்த ஓர் புலவராக கருதப்படுகின்றார். இவரது படைப்பான திருக்குறள் என்பது மிகச்சிறப்பான படைப்பாக கருதப்படுகின்றது. இவ் திருக்குறள் என்பது மிகச்சிறப்பான படைப்பாக கருதப்படுகின்றது. இவ் திருக்குறள்புத்தகமாகியதுபலமொழிகளில் மொழழிபெயர்க்கப்பட்டு பல்இன, பல்மத மக்களாலும் போற்றப்படுகின்ற ஓர் படைப்பாக அமைகின்றது. மேம் இதன் இன்னுமோர் சிறப்பாக இது எந்தவொரு மதத்தையும் மொழியையும் இனத்தையும் சுட்டிக்காட்டக்கூடிய நூலாக அமையவில்லை மாறாக இவை அனைத்தையும் தவிர்து அனைத்து மதங்களிலும், மொழிகளிலும், இனங்களிலும்காணக்கூடியநற்குணங்களைக் காட்டுவனவாக அமைந்துள்ளது. இதனாலேயே இது உலக மக்கள் அனைவராலும்போற்றிப்பாதுகாக்கக்கூடிய ஓர் நூலாக அமைகிறது. அத்தடன்ன உலகவாசிகள் அனைவராலும் போற்றப்படுகின்றமையால்உலகப்பொது மறைஎனவும் பெயர் பெற்றது. இத்தகைய பல சிறப்புகளைக்கொண்ட நூலில் வள்ளுவர் தனது வித்துவத்தன்மையை முப்பாகங்களில் காட்டியுள்ளார். அஜ¯வது இவர் தனது படைப்பான திருக்குறளை முப்பாகங்களாகபிரித்தள்ளார். அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்பவையேஆகும். இதில் அறத்துப்பாலில் இல்லறவியல் என்னும் பகுதியில் தனது படைப்பின் பனொறாவது அதிகாரமாகிய செய்நந்றி அறிதல் என்ற அதிகாரத்தை ஆக்கியுள்ளார். இவர் இவ் அதிகாரத்தில் ஒருவரால் பெறப்பட்ட உதவி பற்றியும் அந்த உதவியின் நன்றியை மறவாதிருத்தல் பற்றியும் பலவாறு எடுத்துக் கூறியுள்ளார்.

இவர் இவ் அதிகாரத்தில் உதவியின் பருமனை எவ்வாறு பார்க்கின்றார் என்றால் உதவி வரைத்தன்று உதவி உதவி செய்யப்பட்டார் சான்பின் வரைத்து என்கிறார்;;;;. அதாவது இந்த உலகில் வாழ்கின்றஒவ்வொருவரும்ஏயையோரிடம் உதவி பெறத்தக்கவர்களாகவே காணப்படுகின்றோம். அவ்வாறு காணப்படும் போது எங்கள் ஒவ்வொருவருக்கு உதவி கிடைப்பது மிகப்பெரிய கொடுப்பனவு ஆகும். ஆனால் நமக்குக் கிடைக்கும் உதவி அல்லது நம்மால் செய்யப்படும் உதவி என்பது அவ் உதவியின் அளவில் அன்றி பெறப்படுபவரின் பண்பிலேயே நாம் செய்த உதவியில் சிறப்பும் அளவும் காணப்படுகின்;றதாக வள்ளுவர் கூறுகின்றார். அத்துடன்

“காலத்தினால் செய்த நன்றி சிறிதேனும்
ஞாலத்தில் மாணப் பெரிது”


என்கிறார் வள்ளுவர்.

பொய்யாமொழிப்புலவரானவள்ளுவர் இக்குறட்பாவின் மூலம் காலத்திற்கு சரியாக கிடைத்த நன்றி பற்றி ஏழு சொற்களில் ஈரடி வெண்பாவில் மிக அருமையாக காட்டுகின்றார். ஏனெனில் நாம் எப்போதும்; எல்லோருக்கும் உதவி புரிகின்றவர்களாக காணப்படும் போது நம்மிடம் உதவி பெறுபவரின் சிந்தனையே நம் உதவியை பெருமை மிக்கனவாக மாற்றக்கூடியது. அதாவது வள்ளுவர் கூறவரும் விடயம் என்னவெனில், ஒருவருக்கு கிடைக்ப்பெறும் உதவியானது மிகச்சிறிய அளவில் காணப்படுமாயின் அது சரியான தகுந்த நேரத்தில் அல்லது சந்தர்ப்பத்தில் கொடுக்கப்படுமாயின் அவ் உதவி இவ் உலகையே விடப் பெரியதாகும் என்கிறார். மெலும் ஒருவருக்குகிடைக்கப்பெறும்உதவியானது தானியங்களில் சிறியதாக திணையளவு போன்றதாக காணப்பட்டாலும் அவ் உதவின் நன்றியை அறிபவர் பனை போன்ற அளவிலேயே கருத்திற் கொள்வார் இதனையே

“தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன் தெரிவார்”

என்று வள்ளுவர் மிகச் சிறப்பாக கூறுகிறார்.

இவைதவிர,



“பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மைக் கடலிற் பெரிது”

என்கிறார் பொதுமறையாளர் வள்ளுவர். அதாவத ஒருவரால் செய்யப்பட்ட உதவியானது எவ்வாறு காணப்படுகின்ற போதும் அவர் செய்த உதவி எந்த விதமான எவ்வாறு காணப்படுகின்ற போதும் அவர் செய்த உதவி எந்தவிதமான பயனையும் எதிர்பார்காது காணப்படும் போதும் அவ் உதவியைஆராய்ந்து பார்த்தால் அது நன்மையாகிய கடலினும் பாற் பெரியதாக வே கருதப்படும். வள்ளுவர் ஒருவரால் செய்த உதவியை கடல், உலகம், வான்உலகு, மண்ஒலகு போன்றவற்றையும் விடப்பெரியதாகவே காணப்படுகின்றது என்கிறார். அவற்றுள்

“செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் அற்றல் அரிது”

என்கிறார்.

அதாவது, ஒருவரகு;கு செய்யும் உதவி அவர் எமக்கு செய்யாது காணும் பொது செய்யப்படுமாயின் அவ் உதவியின் சிறப்பு வையகத்திலும் மற்றும் வானகத்திலும் பார்க்கப் பெரியதாக கருதப்படும்.

“நன்றி மறப்ப நன்றன்று நன்றல்ல
அதை அன்றே மறப்ப துநன்று”

என்பது வள்ளுவன் கூற்றாகும்.

எமக்கு ஒருவரால் செய்யப்பட்ட உதவியை ஒருபோதும் மறக்ககூடாது.அதுமட்டமன்றி அவரால் செய்யப்பட்ட தீமையை அந்தக்கணமே மறப்பது நல்லது என்று கூறுகிறார். ஆனால் நமது இக் காலகட்டத்தில் அரிய பிறவியை எடுத்த மனிதர்கள ஒருவர் செய்த நன்றியை, உதவியை உடனடியாகவே மறந்து விடுகின்றனர் அதுமட்டுமன்றி அவரால் செய்யப்பட்ட தீமையை பல நாட்களாக மனதில் வைத்திருக்கின்றனர். இது வள்ளுவரின் கூற்றிற்கு முற்றுமுழுதாக தலைகிழாக காணப்படுகின்றது.

இறுதியாக அவ் அதிகாரத்தின் அறுதிக்குறளாக பத்தாவது குறளில் வள்ளுவர் நன்றி மறப்பவர் ஒருவரின் பாவச் செயலை எடுத்துக் கூறுகிறார்.

‘எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற வற்கு”

அதாவதாகவள்ளுவர் கூறத்தக்கதுமான விடயம் என்னவெனில், இந்த உலகு நடைமுறையில் பாவம் செய்தவர் அனைவர்க்கும் தண்டனை நிச்சயமானது ஒன்றாகும். அத்தகையுமாக வள்ளுவர் கருதுவது எந்தப்பாவத்தை செய்பவர்க்கும் ஒய்வு கிடைக்கும் ஆனால் ஒருவர் தனது செய்யப்பட் ஒதவியை மறப்பாராயின் அவருக்கு உய்வு இல்லை என்று கூறுகிறார்.

நாமும் நமது வாழ்நாளில் பலருக்கு உதவி செய்துள்ளோம்மற்றும்பலரிடமிருந்துஉதவி செய்துள்ளோம் மற்றுமு; பலரிடமிருந்து உதவி பெற்றுள்ளொம். ஆனால் நாம் உதவி செய்தவர் அவ் உதவியை மறப்பதும் நாம் பெற்றுள்ளொம் ஆனால் நாம் உதவி செயய்தவர் அவ் உதவியை மறப்பதும் நாம் பெற்ற உதவியை நாம் மறப்பதும் சகயமான விடயமாக மாறிவிட்டது. ஏனெனில் நவீனமயமாக்கப்பட்ட இந்த உலகிலேமனிதர் ஒவ்வோர்வற்கும் தமது வேலைச்சுமையைபார்திலேயே முழுவதும் கடந்து போகின்றது. அதனால் பிறர் செய்த உதவியை ஞாபகம் வைப்பதில்லை உதாரணமாக வள்ளுவர் எமக்கு ஆயிரத்த முந்நூற்று முப்பது குறட்பாவை தந்து நமது வாழ்வு சிறக்க மாபெரும் ஒதவியை அளித்துள்ளார். ஆனால் நாம் எவரும் அவ்வுதவியை வாழ்நாளில் ஞாபகம் வைப்பதுமில்லை இறுதி வரை அவர் கூறிய அறநெறியை யடைப்பிடிப்பதுமில்லை இதனால் எம் ஆளுமை குறைகின்றது. ஆகவே இனிவரும் காலத்திலாவது பிறர் செய்த உதவியை மறவாது வள்ளுவன் வாக்கிற்கிணங்க சிறந்த வாழ்வை வாழ் வோம்.

**சு.வக்சலன்**
**யா/புனித பத்திரிசியார் கல்லூரி**

# பிரச்சினைகள்

குருதன்சீடர்களைஅழைத்துக்கொண்டு காட்டு வழியே நடந்து சென்றார். சீடர்களும் அவரைப் பின்தொடர்ந்தனர். அப்போது குருஇ ஒரு சிறிய மரக்கன்று ஒன்றினைக் காட்டி இதைப் பிடுங்கி எறி என்றார். சீடனும் அதை இலகுவாகப் பிடுங்கி எறிந்துவிட்டான்.

சிறிது தூரம் அவர்கள் சென்றதும் முதலிற் பிடுங்கி எறியப்பட்ட வகையான மரம் சற்று வளர்ந்திருந்தது. குரு அதையும் பிடுங்கி எறியும்படி சீடனிடம் கூறினார். அவனால் அதனைத் தனியே பிடுங்கி எறிய முடியவில்லை. மூன்று சீடர்கள் சேர்ந்து கடும்பிரயத்தனப்பட்டு அதைப் பிடுங்கி எறிந்தனர்.

இப்போது நடுக்காட்டிற்கு வந்துவிட்டனர். அவர்கள் நின்ற இடத்தில் அதே வகை மரம் சற்றுப் பெரிதாக வளர்ந்திருந்தது. குரு அதனையும் பிடுங்கி எறிய உத்தரவிட்டார். சீடர்கள் இருபது பேரும் சேர்ந்தும் அந்த மரத்தைப் பிடுங்கி எறிய முடியவில்லை. சீடர்கள் களைத்துப்போய்விட்டனர்.

குருவும்சீடர்களைப்பார்த்து‘இன்றைக்கு நாம் கற்ற பாடம் போதும்’ என்று கூறிக் குருகுலம் போவோம் எனச் சைகை செய்தார்.சீடர்களும் மரம் பிடுங்கியதில் என்ன பாடம் இருக்கப்போகிறது எனத் தமக்குட் பேசிக்கொண்டு குருகுலத்தை அடைந்தனர்.

அங்குகுருவின்போதனைஆரம்பமானது. ‘சீடர்களே!பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அதனைக் களைந்துவிட்டாற் சமூகத்திற்கு நல்லது. வளர விட்டாற் பின்பு நம்மால் எதுவும் செய்ய முடியாது’ என்று கூறி அன்றைய போதனையை நிறைவு செய்தார்.மாணவர்களே! நாமும் வாழ்க்கையில் இதனைத்தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டால் மகிழ்வோடு வாழலாம்.

காலைக்கதிர் Kalaikkathir

# விக்கிரமாதித்தன்ளூபவ் வேதாளம்

## அக்கரை அலசல் / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

சென்னை 18 மே 2023

சிறு வயதில் 'அம்புலி மாமா' மாத பத்திரிகையை படித்து வளர்ந்த வாசகர்களுக்குளூபவ் வாக்காளர்களுக்குளூபவ் வட இந்திய கதை தொகுப்பான 'விக்கிரமாதித்தனும் வேதாளமும்' அத்தப்படி. இனப்போர் காலகட்டத்தில் வளர்ந்தவர்களுக்கு அது குறித்து தெரிய வாய்ப்பில்லை. அதற்காகளூபவ் விக்கிரமாதித்தன் கதை தெரிந்திருக்க கூடாது என்பதல்ல பொருள். தற்போது அனைத்து புத்தகங்களும் கதைகளும் டிஜிடெலில் வருவதால்ளூபவ் புதிய தலைமுறை குழந்தைகள் அவற்றை படிக்க வாய்ப்பாவது உள்ளது.

அந்த விக்கிரமாதித்தன் கதை படித்தவர்களுக்குளூபவ் இதோ ஒரு கேள்வி. நீங்கள் கடைசியாக படித்த வேதாளம் கதை தான்ளூபவ் அந்த தொடரின் கடைசி கதையா? இதற்கு பதில்தெரியவேளூபவ்வேதாளம்தனியாக விக்கிரமாதித்தனிடம்ஒருகேள்விகேட்க வேண்டும். என்னளூபவ்வேதாளத்தின் கேள்விக்கு விக்கிரமாதித்தன் பதில் சொல்ல முடியாததால்ளூபவ் அவன் தலைசுக்குநூறாகவெடித்துசிதறியதாக எங்கும் படித்ததில்லை. ஆனால்ளூபவ் அவன் மௌனம் கலைந்ததால்ளூபவ் வேதாளம் மீண்டும் புளிய மரத்தில் ஏறியதாக தான்ளூபவ் தொடரில் ஒவ்வொரு கதையும் முடியும்.

### எட்டு ஜனாதிபதிகள்

இப்படிதான்ளூபவ்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கே கூட்டிய வடக்கு–கிழக்கு தமிழ் எம்பி–க்களின் கூட்டமும். தொடர்ச்சி இல்லாமல் முடிகிறது. முடிவில்லாமல் தொடருகிறது. இது இந்த ஒரு ஜனாதிபதி மட்டும் சார்ந்த பிரச்சினை அல்ல. மாறாகளூபவ் சுதந்திரம் கிடைத்த நாள் தொட்டுளூபவ் அதுவும்குறிப்பாகளூபவ்1956 'சிங்களம் மட்டும்' பிரச்சினையில் துவங்கிளூபவ் எத்தனையோ அரசுகளையும் அரச தலைவர்களையும் பார்த்துளூபவ் தொடரும்விடயம். ஒருவிதத்தில். தமிழர் தலைமை மட்டுமே அதில் நிரந்தரம்.

சுதந்திரத்தை தொடர்ந்து வந்த காலகட்டத்தை விட்டுவிடுவோம். கடந்த 1987–ல் கைசாத்திடப்பட்ட ராஜீவ்–ஜெயவாத்தனே உடன்படிக்கையில் துவங்கியேளூபவ் தமிழர் தலைவர் சம்மந்தன் மட்டுமே தொடர்ந்து இனப்பிரச்சினை குறித்த பல்வேறு பேச்சுவார்த்தைகளில் பங்குபெற்று வந்திருக்கிறார். ஜேஆர்ஜேளூபவ் அவருக்கு பின்னர்ளூபவ் பிரேமதாசாளூபவ் விஜயதுங்களூபவ் சந்திரிகா குமாரதுங்களூபவ் மஹிந்த ராஜபக்சாளூபவ்மைத்திரிபாலசிறிசேனாளூபவ் கோத்தபாய ராஜபக்சா. ஆவரை தொடர்ந்து தற்போது ரணில் விக்கிரமசிங்சே என்று எட்டு ஜனாதிபதிகள் வந்து போய்விட்டார்கள்.

இதில்ளூபவ்சந்திரிகாமற்றும்மஹிந்தா ஆகிய இருவரும் தலா இரண்டு முறை ஜனாதிபதி பதவி வகித்துள்ளார்கள். இல்லையென்றால்ளூபவ் பத்து ஜனாதிபதிகள் இது வரை இந்த பிரச்சினையில்ளூடவ்டுபட்டிருப்பாஜுகள். அவர்களில் இனப்பிரச்சினைளூபவ் பிரேமதாசாவின் உயிரை காவு வாங்கியது. சந்திரிகா அம்மையார் மயிரிழையில் உயிர்தப்பினார்.

### குருவை மீறிய சிஷ்யன்

இது இப்படி இருக்களூபவ் தற்போது ஜனாதிபதி ரணில் கூட்டிய பேச்சுவார்த்தையில் குரு விக்னேஸ்வரனும்சிஷ்யன்சுமந்திரனும் கட்டிப்பிடித்துசண்டைபோடும்அளவிற்கு போய்விடாமல்ளூபவ் எதிரெதிராக பேசி இருக்கிறார்கள். பேச்சுவார்த்தையின் போது அவர்கள் என்ன பேசினார்கள் என்பது மட்டுமல்ல முக்கியம். தங்களது ளூடவ்கோபிரச்சினையால்மொத்ததமிழ் இனத்தையும் தென்னிலங்கையிடம் காட்டிக்கொடுத்த புண்ணியத்தை இந்த முறை அவர்கள் இருவரும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் கூற்றின் படியேளூபவ் ஜனாதிபதியின் முன்னிலையில்ளூபவ் பதிமூன்றாவது திருத்தத்தின் அடிப்படையிலான முழு அதிகார பகிர்வு தேவை என்று விக்னேஸ்வரன் மீண்டும் கோரி உள்ளார். தற்போது மாகாண சபைகள் இல்லாத காலகட்டத்தில்ளூபவ் தேர்தல் நடத்தகாலதாமதம்ஆகும்என்றால்ளூபவ் அதே பதிமூன்றில் கூறியுள்ளது போல்ளூபவ் மாகாணத்தை நிர்வகிக்க ஒரு ஆலோசனை குழுவை அமைக்க வேண்டும் என்று சாரப்படியும் அவர் கூறி உள்ளார்.

மக்கள்பிரதிநிதிகளின்முடிவோளூபவ் அறிவுரையோ இல்லாமல் ஆளுனர் தன்னிச்சையாகமாகாணஅரசைநடத்த கூடாதுஎன்பதேஇதன்பொருள். அதிலும் குறிப்பாகளூபவ் பதிமூன்றிற்கு உட்பட்ட வழிமுறைகளிலேயே மாகாண ஆட்சி நடைபெற வேண்டும். அதாவதுளூபவ் மாகாண சபைகளின் அதிகாரங்கள் என்று மட்டுமல்லளூபவ் மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெறாமல் முடக்கப்படுமேயானால்ளூபவ் அதற்கும் பதிமூன்றாவது திருத்தத்தில் வழிமுறை உண்டு.

ஆனால்ளூபவ் விக்னேஸ்வரனுக்கு பதில் கூறுவது போல் ஜனாதிபதியின் கூட்டத்தில்பேசியசுமந்திரன்ளூபவ்தனது குரு முன் வைத்துள்ள வழிமுறை வேலைக்கு ஆகாது என்று கூறினார். காரணம்ளூபவ் ஆலோசனை குழு போன்ற வழிமுறைகள்ளூபவ் மாகாண சபை தேர்தல்களை மீண்டும் பின் தள்ளுவதற்கு அரசிற்கு ஏதுவாக இருக்கும்ளூபவ் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### பதிமூன்றுக்கு அரோகரா

சுமந்திரன் கூறியதில் அர்த்தம் இல்லாமல் இல்லை. ஆனால்ளூபவ் அதன் தாக்கமும் அதன் வீரியமும்ளூபவ் அவர் அவை குறித்து யோசித்திருந்தால் புரிந்திருக்கும். பதிமூன்றாவது திருத்தம்ளூபவ் அண்டை நாடான இந்தியாவின் முன்னெடுப்புகளால் அரசியல் யாப்பில் உள்வாங்கப்பட்ட ஒரு பகுதி. அது 1987–ம் ஆண்டு சார்ந்த பழங்கதை.

ஆனால்ளூபவ் அந்த பதிமூன்றாவது திருத்தத்தை முழுவதுமாக செயல்படுத்த இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இந்தியாவை கோரியதுளூபவ் விக்னேஸ்வரன்ளூபவ் சுமந்திரன் மற்றும் வேறு பல தமிழ் தலைவர்கள் தான். கடந்த வருடம் ஜனவரி மாதம் அவர்கள் அனைவருமாக சேர்ந்து பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில்ளூபவ் இந்தியா கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவே ரணில் இந்த பேச்சுவார்த்தைகளுக்கு புத்துயிர் கொடுத்து மீண்டும் துவங்கி உள்ளார்ளூபவ் என்பது தென்னிலங்கை செய்தி.

அதாவது அப்போது அப்படி கோரிவிட்டுளூபவ் சுமந்திரன் அதனை இப்போது எதற்கு தலைகீழாக புலட்டுகிறார் என்பது வழக்கம் போலவே புரியாத புதிர். இது குறித்துளூபவ்

இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதிய பிற தமிழ் தலைவர்கள் என்ன கூறுகிறாஜுகள் என்பதுஒருபுறம். ஆதை விட முக்கியம்ளூபவ் குறிப்பாகளூபவ் சுமந்திரனின் அரசியல் குருவான சம்மந்தன் என்ன நினைக்கிறார் என்பதையும் அவரே தெளிவுபடுத்த வேண்டும்.

வேறொன்றும் இல்லை என்றாலும்ளூபவ் சும்மாவாவதுளூபவ் சம்மந்தன் மீது இருக்கும் தனிப்பட்ட மரியாதை காரணமாகவும்ளூபவ் தமிழ் அரசியல் தலைமைகளின் ஒருமித்த

கருத்தின் காரணமாகவும்ளூபவ் இனியாவது இந்திய அரசுளூபவ் இது போன்ற தவறுகளை மீண்டும்ளூபவ் மீணடும் செய்யாதுளூபவ் வெளியே இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். இப்படி ஒவ்வொரு முறையும் தான் ஆதரிக்கும் தமிழ் மக்களின் தலைமைகளிடமே தொடர்ந்து மூக்கறு படவேண்டாம்.

### இல்லாத ஊருக்கு வழி

இது இப்படி என்றால்ளூபவ் பதிலுக்கு சுமந்திரன் முன் வைத்திருக்கும் அதிகார பகிர்வு அமலாக்க திட்டம் அதை விட நகைப்பிற்குரியதுளூபவ் வேதனைக்குரியதும்கூட. காரணம்ளூபவ் அவர் தற்போதைய சூழலில்ளூபவ் இல்லாத ஊருக்கு வழி தேடிக் கொண்டிருக்கிறார் என்பது தான்.

ஜனாதிபதியின் பேச்சுவார்த்தையில் கருத்து கூறிய சுமந்திரன்ளூபவ்

பதிமூன்றிற்கும்அப்பால்சென்றுளூபவ் முன்னர் மைத்திரி–ரணில் அரசு முன் வைத்த

புதிய அரசியல் யாப்பு மூலம் பூரண தீர்வு பெறலாம் என்று கூறினார்.

அந்த தீர்வு குறித்துளூபவ் அப்போது பிரதமராக இருந்தளூபவ் தற்போதைய ஜனாதிபதி

ரணிலுக்கு நன்றாகவே தெரியும் என்றும்ளூபவ் அதற்க அவர் முழு ஆதரவதெரிவித்தார் என்றும் சுமந்திரன் கூறினார்.

இதேகருத்தைசுமந்திரன்முன்னரும் கூறியுள்ளார். எப்போதுமேளூபவ் ரணில் தரப்பில் இருந்து அதற்கு மறுப்பு வரவில்லை. இப்போதும் வரவில்லை. இன்னும் சொல்லப்போனால்ளூபவ் முந்தையகாலகட்டத்தில்ளூபவ்சுமந்திரன் கூற்றைவழிமொழிவது போலவேளூபவ் அப்போதைய பிரதமரகராக ரணில் கருத்து கூறி வந்துள்ளார்.

ஆனால்ளூபவ்அரசியல்யாப்புகுறித்த விடயங்கள் தனி மனிதரால் முடிவு செய்து விடமுடியாது. அதற்க என்று அரசியல்வழிமுறைகளும்ளூபவ்யாப்பே வகுத்துள்ளநெறிமுறைகளும்உள்ளன. அதில் மிகவும் முக்கியமானதுளூபவ் அன்றைய பாராளுமன்றம் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் பாராளுமன்றமே புதிய அரசியல் நிர்ணய சபையாகவும் செயல்பட முடிவு செய்தது.

அந்த அரசியல் நிர்ணய சபையின் ஒரு உப குழுவின் வேலை திட்டத்தை குறித்தேசுமந்திரன் இப்போது பேசுகிறார். ஆனால்ளூபவ்கடந்த2020பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர்ளூபவ் பழைய பாராளுமன்றம் நிறுவிய அரசியல் நிர்ணயசபையும்கலைக்கப்பட்டுவிட்டது. அதே சமயம்ளூபவ் கடந்த வருடம் பதவி விலக்கப்பட்ட ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சா ஆட்சியின் கீழ்ளூபவ் பாராளுமன்றம் தன்னை மீணடும் ஒரு முறைபுதியஅரசியல்நிர்ணயசபைஎன்று அறிவித்துக்கொண்டது. அதற்காகசில ஆலோசனை குழுக்களும் வெளியே இருந்து வேலை செய்தன.

தற்போதும்ளூபவ்ஆட்சிமாறினாலும் காட்சி முற்றிலும் மாறி விடவில்லை. கோத்தபாய இப்போது ஜனாதிபதி இல்லை. உண்மை. ஆனால்ளூபவ் அவர் காலத்திய பாராளுமன்றம் இன்னமும் இயங்கிக்கொண்டு தான் இருக்கிறது. அந்த பாராளுமன்றமும் சட்டப்படிஅரசியல்நிர்ணயசபையாகவும் தொடருகிறது. அவ்வாறு ஒன்று இருக்கிறது என்ற உண்மையை அனைவரும் மறந்திருக்கலாம். ஆனால்ளூபவ் மூத்த சட்டதரணியான சுமந்திரன் அவ்வாறு செய்யலாகாது.

அதாவதுளூபவ் சுமந்திரன் சுட்டிக்காட்டிய பழைய தீர்வுகளையும் தீர்மானங்களையும் புதிய அரசியல் நிர்ணய சபை மூலமாகவே நிறைவேற்ற வேண்டும். அல்லதுளூபவ்அங்கொன்றும் இங்கொன்றுமாகதற்போதையயாப்பில் திருத்தங்கள் கொண்டு வந்தால் போதும் என்று நினைத்தாலும்ளூபவ் அதற்கும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவை. அவ்வாறானால்ளூபவ் முதலில் பாராளுமனறம் அரசியல் நிர்ணய சபையைகலைத்துவிடுவதாகதீர்மானம் நிறைவேற்ற வேண்டி இருக்கலாம். பின்னர்ளூபவ் மூன்றில் இரண்டு பங்கு

வாக்குகளுக்கு வழி தேடலாம்.

ஆனால்ளூபவ் பாராளுமன்றத்தில் ளூபவ்ஜனாதிபதிரணிலுக்குபொதுவாக ஆதரவு தெரிவித்துள்ள மஹிந்த ராஜபக்சாளூபவ் இது விடயத்தில் என்ன முடிவு எடுப்பார் என்பது; சுமந்திரனும் அறிந்ததே.

அதைவிட முக்கியம்ளூபவ்மஹிந்தா தரப்பு முழு ஆதரவ அளித்தாலும்ளூபவ் பாராளுமன்றத்தில் அரசுக்கு மூன்றில் இரண்டுபங்குஉறுப்பினர்கள் இல்லை.

எனவேளூபவ் பழைய திருத்த வரைவிற்கு எதிர்கட்சிகளின் ஆதரவை உறுதி செய்துகொண்ட பின்னரேளூபவ் சுமந்திரன் இந்த பேச்சை துவங்கி இருக்க வேண்டும்.

தற்போதுளூபவ் அவர் செய்திருப்பதுளூபவ் இந்தியாவை அவமதிப்பது. அத்துடன் பாராளுமன்ற ஆதரவு இல்லாத ஜனாதிபதி ரணிலை கேலி செய்வது. அவ்வளவு தான்.

————————




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.05.2023இல் வெளியிடப்பெற்றது.
இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 04 வியாழக்கிழமை 18.05.2023 கதிர் 61

## முள்ளிவாய்க்காலில் திரண்டது தமிழினம்!

### உயிர்நீத்த உறவுகளுக்குச் சுடரேற்றி அஞ்சலி

இறுதிப் போரில் ஈழத் தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாகச் செத்து வீழ்ந்ததை நினைவேந்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பிரதான நிகழ்வு முள்ளிவாய்க்கால் மண்ணில் இன்று உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

இதில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் திரண்டு உயிர்நீத்த உறவுகளுக்குச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர்களில் ஒருவரான அருட்பணி

☞ 2

# தமிழர் தாயகம் மீதான வல்வளைப்பு இனவழிப்புப் போரின் ஓர் அங்கமே

## முள்ளிவாய்க்காலில் இன்று பிரகடனம்



தமிழர் தாயகத்தை வல்வளைப்புச் செய்யும், தாயகத்தில் தமிழ் மக்களின் குடிப்பரம்பலைப் பலவீனமாக்கும் எந்த முயற்சியையும் சிங்கள–பௌத்த பேரினவாதம் எம் மீது தொடுத்துள்ள இனவழிப்புப் போரின் ஓர் அங்கமெனவே நாங்கள் எப்போதும் கருதுகின்றோம்.

இவ்வாறு அறிவித்துள்ளது இன்றைய தினம் வெளியிடப்பட்ட முள்ளிவாய்க்கால் பிரகடனம். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று மே 18, தமிழினப்படுகொலை நாள். சிங்கள அரசின் தமிழினப்படுகொலை, வரலாற்றில் திட்டமிடப்பட்டு, முள்ளிவாய்க்காலில் உச்சம் தொட்டு இன்றுடன் 14 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. ஆக்கிரமிப்பு சிங்கள அரசிற்கு அடிபணியாது இறுதி வரைக்கும் பிராந்திய, பூகோள பேரரசு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எழுந்த இனத்தின் ஆயுதப் போராட்டம் மட்டுமே மௌனிக்கப்பட்டது என்பதை சுட்டும் நாள். முள்ளிவாய்க்கால் சிங்கள அடக்குமுறை அரசிற்கு, பூகோளப் பேரரசு கட்டமைப்புக்கு எதிரான, ஈழத் தமிழினத்தின் எதிர்ப்பையும் எம் விடுதலை வேணாவாவையும் வரலாற்றில் எப்போதுமே பதிய வைத்துக்கொண்டிருக்கின்றது.

☞ 2

## உயிர்நீத்த உறவுகளுக்கு நந்திக் கடலில் அஞ்சலி





முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு இன்று காலை நந்திக்கடலில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரனின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, நந்திக்கடலில் உயிர்நீத்த உறவுகளுக்கு மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலியின் பின்னர் ரவிகரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், எங்கள் பெருமைமிகு வரலாற்றின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல். ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளோம் – என்றார்.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் கரைதுறைப்பற்று தொகுதிக் கிளை செயலாளர் அ.ஜெ.பீற்றர் இளஞ்செழியன், முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் இ. ஜெகதீஸ்வரன் மற்றும் தமிழ் அரசுக்கட்சி மூலக்கிளைகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளின் ஆத்மாசாந்திவேண்டி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. (02)

## கொழும்பில் எதிர்ப்புக்கு மத்தியில் முள்ளிவாய்க்கால் நினைவுச் சுடர்!

### பொலிஸ், இராணுவம் குவிப்பு





கொழும்பு, பொரளை மயான சுற்றுவட்டத்தில் இன்று முற்பகல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் இன்று இடம்பெறும் நினைவேந்தல்களுக்கு ஒத்திசைவாக இந்த நிகழ்வு நடைபெற்றது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நிகழ்வில் வெள்ளை மலர்களுடன் மூவின மக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

எனினும், இந்த நினைவேந்தல் நிகழ்வைத் தடுத்து நிறுத்த ஒரு குழுவினர் முயற்சித்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளை நினைவேந்துவதை அனுமதிக்க முடியாது என்று இந்த நிகழ்வுக்கு எதிராகப் பல்வேறு எதிர்ப்புக் கோங்களை எழுப்பிய அந்தக் குழுவினர் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

குறிப்பிட்ட குழுவினரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த தமிழ் உறவுகளை நினைவேந்தும் சுடர் ஏற்றப்பட்டது.

அத்துடன் சம்பவம் தொடர்பில் அறிந்து அப்பகுதியில் பொலிஸாரும் இராணுவமும் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. (02)

## தனுஷ்கோடியிலும் நினைவேந்தல்





மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தனுஷ்கோடி அரிச்சல் முனையில் தமிழர் கட்சி சார்பில் அனுசரிக்கப்பட்டது. இலங்கையில் உள்நாட்டு போரின்போது ஈழத் தமிழர்களை கொத்து கொத்தாக முள்ளிவாய்க்காலில் கொன்று குவிக்கப்பட்டதை அடுத்து ஆண்டுதோறும் உலக தமிழர்கள் மற்றும் இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்களால் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இன்று மே 18 முள்ளிவாய்க்கால் நினைவுத் தினத்தையொட்டி தமிழர் கட்சி சார்பில் அக்கட்சியின் மாநில செயலாளர் தீரன் திருமுருகன் தலைமையில் குழந்தைகள் உட்பட ஏராளமானோர் தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் உருவப்படத்தை சிறு படகு ஒன்றில் வைத்துக் கடலில் விடப்பட்ட பின்னர் கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த ஈழத்தமிழர் நினைவாக குரல் எழுப்பியதோடு, ராஜபக்ச வுக்கு எதிராகவும் குரல் எழுப்பி தங்களுடைய கண்டனத்தைப் பதிவு செய்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை சென்னையிலுள்ள மெரினா கடற்கரையில் அமைக்கவேண்டும். மே 18 தமிழின அழிப்பு நாள் என அறிவித்து அனுசரிப்பு விழாவாக தமிழக அரசு நடத்தவேண்டும் என அஞ்சலி கூட்டத்தில் பேசினர்.

## திருமலையில் நினைவேந்தல்: நீதிமன்றத்தால் தடை உத்தரவு

திருகோணமலை சிவன் கோயிலுக்கு அருகில் நடத்தத் திட்டமிட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தாக்கல் செய்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, திருகோணமலை மாவட்ட

☞ 2

## யாழ். பல்கலைக்கழத்திலும் இன்று நினைவேந்தல் நிகழ்வு



யாழ்.பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் இறுதிநாள் அஞ்சலி மாணவர் ஒன்றியத்தினால் இன்று மாலை 2:30 மணியளவில்

☞ 2

# மக்கள் மனதை வென்று காட்டுங்கள்!

## மூன்று புதிய ஆளுநர்களிடமும் ஜனாதிபதி நேரில் கோரிக்கை

மூன்று மாகாணங்களின் மக்களுக்கும் சேவையாற்றவே உங்கள் மூவரையும் ஆளுநர்களாக நியமித்துள்ளேன். நீங்கள் மூவரும் அந்தந்த மாகாணங்களில் இன, மத பேதமின்றி சேவையாற்றி மக்களின் மனதை வென்று காட்டுங்கள்.

இவ்வாறு, புதிதாகப் பதவியேற்ற மூன்று புதிய ஆளுநர்களிடமும் நேரில் தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸும், கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமானும், வடமேல் மாகாண ஆளுநராக லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தனவும் ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். அதன் பின்னர் மூன்று புதிய ஆளுநர்களுடனும் ஜனாதிபதி கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆளுநர்களுக்கு எதிராக மக்கள் தரப்பிலிருந்து முறைப்பாடுகள் எதுவும் வரக்கூடாது என்பதுதான் எனது விருப்பம். ஆளுநர்களை நியமிப்பதும் பதவி நீக்குவதும் ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்டது என்பதை முன்னாள் ஆளுநர்கள் மறந்து செயற்பட்டுள்ளமை வருத்தமளிக்கின்றது. - என்றார். (02)



## யாழ். பல்கலை...







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தூபியில் இடம்பெற்றது.

பொதுசுடரை யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் ஏற்றிவைத்தார். தொடர்சியாக ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது

தொடர்ச்சியாக முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

மாணவர்கள் , விரிவுரையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்

## சாவகச்சேரியில் நினைவுதினம்









வடக்கு -கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில், சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினால் புதன்கிழமை சாவகச்சேரி மகிழங்கேணி கிராமத்தில் தமிழினப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் தேசத்தின் கஞ்சியான முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது. நினைவேந்தல் மற்றும் தேசத்தின் கஞ்சி வழங்கும் நிகழ்வுகளில் முஸ்லிம் மக்களும் பங்கேற்றிருந்தனர்.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அமைதியைச்சீர்குலைக்கும்வகையிலான எந்தவொரு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்வதற்கு எதிராக இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த தடை உத்தரவில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட 13 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (02)

## முள்ளிவாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சின்னத்துரை லியோ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து சம நேரத்தில் சுடர்களை மக்கள் ஏற்றினர்.

அதன் பின்னர் 'முள்ளிவாய்க்கால் பிரகடனம்' வாசிக்கப்பட்டது. அதனைத் தென்கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் வாசித்தார். (02)

## தமிழர் தாயகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முள்ளிவாய்க்காலில் இருந்துதான் ஈழத் தமிழினத்தின் வினைத்திறன் மிக்க சாமர்த்திய வலுமைய போராட்டத்தின் திசை தீர்மானிக்கப்படுகின்றது. தமிழினப் படுகொலைக்கான நீதி என்பது எமது விடுதலையை நோக்கிய பயணம். அந்த விடுதலைக்கான பயணத்தின் தூரத்தை வரலாறுதான் தீர்மானிக்கின்றது. அந்த வரலாற்றை தாமே எழுத வேண்டிய கட்டாயத்திற்குள் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது என்பது நாம் அறியாதது அல்ல. ஆனால் முள்ளிவாய்க்கால் மீண்டும் மீண்டும் அதை நினைவூட்டிக்கொண்டிருக்கின்றது. எமக்கு முன்னே எம் உறவுகள் கொத்துக்கொத்தாக படுகொலைசெய்யப்பட்ட கணங்கள்,நினைவுகள் எம்மைவிட்டு ஒருபோதும் நீங்கப்போவதில்லை. அவர்களின் கனவுகளைச் சுமந்த காற்றின் கனதியை சுவாசித்துக்கொண்டும், அவர்களின் குருதியால் சிவந்துபோன புனித பூமியின் மீது நின்றுகொண்டும்தான் நாங்கள் நினைவேந்துகின்றோம், சத்தியம் செய்கின்றோம்.

என்றுமில்லாதவாறு எம் தேசம் இன்று ஆயுதங்கள் அற்ற பெரும் போரை எதிர்கொண்டு நிற்க்கின்றது. இது நாளுக்கு நாள் விரிவடைந்து ஒவ்வொரு ஈழத் தமிழரின் வாசல் வரைக்கும் வந்துவிட்டது. சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புத்திணிப்பு பல்வேறு வடிவங்களை எடுத்துள்ளது. இவ்வாக்கிரமிப்புத் திணிப்பு, எம் இருப்பை உருக்குலைப்புச் செய்கின்றது. அதற்கெதிராகப் போராடுவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழிகளேதுமில்லை என்பதையும் இடித்துரைத்து நிற்கின்றது. முள்ளிவாய்க்கால் மண்ணிலும் நந்திக்கடல் வெளியிலும் எழுதப்பட்ட எங்கள் துயர் மிகு வரலாற்றிலும் உன்னததியாகங்களிலும்தான் எமது எதிர்காலம் கட்டமைக்கப்பட்டுள்ளது. எமது தாயகத்தின் மண்ணிலும் காற்றிலும் கடலிலும் கலந்துள்ள எமது உறவுகளின் இறுதி மூச்சும், சிந்திய குருதியும் அவர்களின் இறுதியும் உறுதியுமான இலட்சியமும் எம்மை இன்றும் வழிநடத்தும் சக்திகளாக நிலைத்து நிற்கின்றன.

சிங்கள-பௌத்த அரசு தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதில் அரசியல் விருப்பு கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. சிங்கள-பௌத்த ஏகாதிபத்தியத்தையும் சிறீலங்காவின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பையும் சிக்கலுக்குட்படுத்தாத தீர்வை முன்மொழிகின்றது. சிறீலங்காவின் ஒற்றையாட்சி கட்டமைப்பு முறைமைதான் இனப்பிரச்சினைக்கான அடிப்படை என்பதை சிங்கள அரசு ஏற்க முனைவதாகத் தெரியவில்லை. மத்தியிலே அதீத அதிகாரம் குவிக்கப்பட்ட ஆட்சி முறைமை, பல் தேசிய இனங்களைக் கொண்ட தேச - நாடுகளுக்கு ஒவ்வாத தன்மையை இன்னும் சிறீலங்கா மறுத்தே வருகிறது.

சிங்கள தேசம் தனது படை பலத்தை ஒன்றுதிரட்டி எம் பூர்வீகத் தாயகத்தை மிகச் செறிவாக இராணுவமயப்படுத்தி வருகின் றது.

இராணுவமயப்படுத்தலின் அடிநாதமாக இருப்பது, இராணுவவாத விழுமியங்களில் ஈழத்தமிழர்களை நம்பிக்கை கொள்ள வைப்பதாகும்.

இராணுவமயமாக்கத்தின் நீட்சியாகவே போதைப்பொருள் பயங்கரவாதத்தை நோக்க வேண்டியுள்ளது. எம் தாயகத்தில் இளந்தலைமுறையினரை போதைக்கு அடிமையாக்குவதன் மூலம் ஆக்கிரமிப்பு அரசிற்கு எதிராகப் போராடுகின்ற விடுதலை மனநிலையில் இருந்து அவர்களைத் திசை திருப்புகின்றது. போதைப்பொருளை சிறீ-லங்கா அரசு ஈழத்தமிழர்ககளுக்கெதிரான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது. எம் தலைமுறையை விடுதலை மன நிலையில் இருந்து திசை திருப்புவது மட்டுமல்லாது இன்னொரு கூட்டுத் தலைமைத்துவம் தலைதூக்காதவாறு பகிரதப் பிரயத்தனம் செய்கின்றது. போதைப் பொருளுக்கு இளம் தலைமுறையை அடிமையாக்குவதன் மூலம் ஈழத்தமிழர்களின் முதுபெரும் சொத்தான கல்வியைச் சீரழித்துவருகின்றது.

எம் தாயகத்தில் மிக அண்மையில் அதிகரித்து வரும் மத முரண்பாடுகளையும், சாதிய சிந்தனையின் எழுச்சியையும் சிங்கள அரசின் அல்லது சிங்கள அரசிற்கு துணைபோகும் சக்திகள் கையிலெடுத்துள்ள உத்தியாகவே நோக்க வேண்டியுள்ளது. தமிழ்த் தேசியம் என்பது மத, பிராந்திய வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் கடந்த, ஒரே தேசத்தவர்கள் என்ற புரிதலின் அடிப்படையிலமைந்தது. சாதியம், பெண்ணடிமைத்தனம், மத அடிப்படைவாதம் போன்ற பிற்போக்குத்தனமான உள்ளக முரண்பாடுகளுக்கு முற்றாக எதிரான பாதையில் அவற்றை ஒழிப்பதையும் முதன்மை இலக்குகளில் ஒன்றாக வரித்துக்கொண்டது.

ஒரு தேசமென்பது வெறுமனே ஈழத் தமிழர் பண்பாட்டுக் கூட்டிருப்பு மட்டுமல்ல, ஈழத்தமிழர் பண்பாட்டு கூட்டிருப்புடனான அரசியல் கூட்டுத் திரட்சியும்கூட. ஈழத்தமிழர் பண்பாட்டுடனான அரசியல் கூட்டுத் திரட்சி ஈழத் தமிழ் மக்களின் பகிரப்பட்ட அரசியல் வேணாவாவில் இருந்து கட்டமைக்கப்படுகின்றது.

தேசம் என்பது எமக்கான பூர்வீகத் தாயகமும், அதைச் சூழவுள்ள கடல் எல்லையும், ஈழத்தமிழினத் தனித்துவமும், வரலறும், மொழியும், ஒருபோதும் பராதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகள் உள்ளடங்கியதுமாகும். இதுவே விடுதலைப் போராட்டத்தையும், அதனோடு இணைந்த ஈழத் தமிழர்களின் தியாகத்தையும் எம் மக்களை ஒரு புள்ளியில் இணைக்கின்றது. இவை அனைத்தும் சேர்ந்துதான் ஈழத்தமிழ்த் தன்மையை வரவிலக்கணப்படுத்துகின்றது.

ஈழத்தமிழ்த் தன்மையில் வாழுதல், போராட்ட வடிவமாக மாறி வருகின்றது. இப்போராட்ட வடிவம், விளிம்புமைய போராட்டமாக, பல்வேறு போராட்டக்களங்கள் உருவாக்கப்பட்டு மக்கள் மையப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் தமிழ்தேசியம் மக்கள் மைய நாளாந்த தேசியமாக வேண்டிய வரலாற்றுத் தேவையும் உணரப்பட்டு வருகின்றதை மறுக்கவும் முடியாது.

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் புவிசார் அரசியல் மிக முக்கியமானது. தற்போதைய பூகோள புவிசார் அரசியலின் செல்நெறி ஏக துருவ பேரரசு கட்டமைப்பு உருவாக்கத்திற்கான களமுனைப்புக்களை உள்வாங்கியிருக்கின்றது. ஏக துருவ பேரரசு தலைமைத்துவக் கட்டமைப்புக்கு, ஈழத் தமிழ் மக்களின் அயுத விடுதலைப் போராட்டம் தடையாக இருந்ததனால், ஆயுதப் போராட்டம் பல்தரப்பு பங்காளிகளால் சிதைக்கப்பட்டது என்பது புதிய தகவல் அல்ல. ஏகதுருவ பேரரசு கட்டமைப்பை பிராந்திய ரீதியாகவும் பூகோள ரீதியாகவும் முன்னெடுப்பதற்கு ஈழத் தமிழ் மக்களின் விடுதலை வேட்கையும் தமிழ்த் தேசியக் கோரிக்கையும் தொடர்ந்தும் சவாலாகவே இருக்கப்போகின்றது. பூகோள, பிராந்திய பேரரசு கட்டமைப்பு முயற்சிகளைக் கையாள்வதில்தான் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் இராசதந்திர பலம் தங்கியிருக்கின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வில் ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளும், கோரிக்கைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம். அவையாவன:

1. நினைவுகூரல் என்பது அடிப்படை உரிமை சார்ந்தது மட்டுமல்ல ஈழத் தமிழர்களின் பண்பாட்டு உரிமையும்கூட ஆகவே சிறிலங்கா அரசு ஈழத்தமிழர்களின் நினைவுகூரல் உரிமையை ஒரு போதும் தடுக்க முடியாது,

2தமிழ் மக்கள் எப்போதும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகள் உட்பட சிங்கள் பௌத்த பேரினவாதம் தமக்கெதிராகத் தொடரும் இனவழிப்புத் தொடர்பாக சர்வதேச விசாரணையையே கோரி நிற்கின்றார்கள். அதற்குக் குறைவான எதையும் நாங்கள் ஏற்கப் போவதில்லை.

3.தமிழர் தாயகத்தை வல்வளைப்புச் செய்யும், தாயகத்தில் தமிழ் மக்களின் குடிப்பரம்பலைப் பலவீனமாக்கும் எந்த முயற்சியையும் சிங்கள-பௌத்த பேரினவாதம் எம் மீது தொடுத்துள்ள இனவழிப்புப் போரின் ஓர் அங்கமெனவே நாங்கள் எப்போதும் கருதுகின்றோம்.

4. தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்திற்குரியவர்கள் என்பதையும், தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும், ஒருபோதும் பராதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும், தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும்.

5. பல்தேசிய சனநாயக முறைக்கூடு தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட வேண்டும். தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரையும் ஓயோம். எமது மக்களின் விடுதலை வேண்டிய கனத்த சுவாசத்திலும், புனித பூமியிலும் நின்று அவர்களின் கனவுகளைச் சுமந்து தொடர்ந்துபயணிக்கசத்தியம்செய்கின்றோம்.

# மத நல்லிணக்கத்துக்கு பங்கம் விளைவிக்கும் பாதிரியாரின் கருத்துக்கு எதிராக நடவடிக்கை

## பிரசன்ன ரணதுங்க போர்க்கொடி



மத நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் போதகர் ஒருவர் தெரிவித்த கருத்துக்கு எதிராக அரசமைப்பு ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், போராட்டத்தில் இருந்து பௌத்த மதத்துக்கு எதிராக பேசியவர்கள் மீதும், தலதா மாளிகைக்கு எதிராகப் பேசியவர்களுக்கும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கம்பஹாவில் இடம்பெற்ற பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு –

கேள்வி :– அமைச்சரே, உங்கள் முன்னாள் ஆளுநர்கள் தற்போது நீக்கப்பட்டுள்ளனரே...

பதில் :– ஆளுநர்களை நியமிப்பது மற்றும் நீக்குவது ஜனாதிபதியின் பொறுப்பாகும். அப்படித்தான் நடக்கிறது.

கேள்வி :–உங்கள் ஜனாதிபதியின் கீழ் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். தற்போதுள்ள அரசாங்கத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்? இது நியாயமானதா?

பதில் : இல்லை, அதில் தவறில்லை. ஒவ்வொரு அரசாங்கத்திலும் புதிய ஜனாதிபதிகள் நியமிக்கப்படும்போது, ஜனாதிபதிகள் அந்த சந்தர்ப்பங்களில் ஆளுநர்களை நியமனம் செய்கிறார்கள். இந்த முறையும் அதுதான் நடந்தது. அது தொடர்ந்தும் நடக்கும்.

கேள்வி :– எதிர்காலத்தில் மஹிந்த ராஜபக்ச மீண்டும் பிரதமராக நியமிக்கப்படுவார் என கூறுகிறார்களே...?

பதில் :– இது சில ஊடகவியலாளர்களின் பிரசாரம். மொட்டு கட்சியிலோ அரசாங்கத்திலோ அவ்வாறானதொரு தீர்மானமோ அல்லது கலந்துரையாடலோ நாட்டிலே இல்லை.

கேள்வி :– இதற்கு நீங்கள் பொருத்தமானவர் இல்லையா? ஏனெனில், கம்பஹா மாவட்டத்திலிருந்து அதிக விருப்பத்தேர்வுகள் உங்களுக்குக் கிடைத்தனவே...!

பதில் :– விருப்பங்கள் மற்றும் பிறவியங்களை விட மூத்த பிரஜை மற்றும் செயல்திறன் மிகவும் முக்கியமானது. இதன்படி, பிரதமர் தினேஷ் குணவர்தன இதன்போது நியமிக்கப்பட்டுள்ளார். இது எமது கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நியமிக்கப்பட்டது. கட்சி என்ற ரீதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தற்போது மிகவும் பொருத்தமான நபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கேள்வி :– தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவான ஆளுநர்களை நீக்கியதாக எதிர்க்கட்சிகள் கதைக்கின்றனவே?

பதில் :– தமிழ் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் வடமேல் மாகாணத்தில் இல்லை. பொய்களை பேசி இந்த நாட்டை ஒன்றும் செய்ய முடியாத பாதாளத்துக்கு அனுப்பும் குழுக்கள் செய்யும் செயலாகவே நான் பார்க்கிறேன்.

கேள்வி : தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்படுவது உண்மையா...?

பதில் :– போராட்டத்தின்போது என்ன நடந்தது? போராட்டத்தின்போது காலி முகத்திடலில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கவில்லையா? சிங்கள இனம் இல்லை, மதம் இல்லை. இந்த நாடு இப்படித்தான் இருக்கிறது என்று பிக்குமார்கள் பேசவில்லையா? அப்போது யாரும் அதை எதிர்க்கவில்லை.

ஓர் அரசு ஏதாவது செய்ய முயலும்போது, ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை சொல்கிறார்கள். விகாரை, தேவாலயம் எல்லாம் போராட்டத்தில் இருந்தது. அதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைவரும் இருந்தனர். பிறகு அதையெல்லாம் செய்வது நல்லது. ஆனால், சில ஏற்பாடுகள் செய்து தீர்வு காணப்போகும் போது, இப்போது அவர்கள் சத்தம் போடுகிறார்கள். நாட்டு மக்கள் இதில் புத்திசாலிகள்.

கேள்வி :– மூன்று ஆளுநர்களை நீக்கியமை தொடர்பில் அமைச்சர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும்போது ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து ரணில் மற்றும் சஜித் ஆகியோர் ஒன்றிணைவார்கள். பிறகு மொட்டுக்கு என்ன நடக்கும்?

பதில் :– எங்களில் யாராவது ஒரு ஜனாதிபதியை நியமித்துள்ளீர்களா? ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? ஜனாதிபதி தேர்தல் வரும்போது சிறந்த வேட்பாளர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவதற்கு தேவையான ஆதரவு வழங்கப்படும்.

கேள்வி:–ரணில் வந்தால் ரணிலுக்கு ஆதரவளிப்பீர்களா?

பதில் :– ரணில் விக்கிரமசிங்க தகுதியானவர் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் நாங்கள் அதற்கு ஆதரவளிப்போம்.

கேள்வி :– அவர் பௌத்த மதத்துக்கு எதிரான போதகர் ஒருவர் மீது குற்றம் சுமத்தியுள்ளாரே...?

பதில் :– அரசமைப்பின் பிரகாரம், மத போதகருக்கு எதிராக செயற்பட முடியும். போராட்டத்தில் இருந்து பௌத்தத்துக்கு எதிராக பேசியவர்கள் மீதும், தலதா மாளிகை பற்றி பேசியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் வௌ;வேறு நேரங்களில் வரும் பொய்கள் இவை. நாட்டைப் பற்றி சிந்தித்து வேலை செய்பவர்கள் சிந்திப்பதில்லை. சட்டத்தை நடைமுறைப்படுத்த அந்த நிறுவனங்களிடம் ஒப்படைத்து நாட்டைப் பற்றி சிந்தித்து தொடர்ந்து பணியாற்ற வேண்டும்.

கேள்வி :– டெங்கு தொடர்பான அடுத்த வேலைத்திட்டம் என்ன?

பதில் :– நாடு முழுவதும் டெங்கு ஆபத்து தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அதற்காக ஜனாதிபதியின் வழிநடத்தல் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் மாவட்டக் குழுக்கள், பிரதேசக் குழுக்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு, உள்ளூராட்சி அமைப்புகளையும், கிராமக் குழுக்களையும் தொடர்புகொண்டு, கிராம மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, கிராமக் குழுக்களுக்கு உள்ளது. பிரதேச செயலக அலுவலகங்கள், சுகாதார திணைக்களங்கள், ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் ஏற்கனவே தலையிட்டு தேவையான உதவிகளை வழங்கியுள்ளன.

கேள்வி :– தற்போது கம்பஹா மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்களின் சிகிச்சை மற் றும் மருந்துகளின் நிலை எப்படி உள்ளது?

பதில் :– மருத்துவமனைகளுக்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கையை வைத்து மாவட்டத்தின் நிலையை அளவிடுவது கடினம். தற்போதைய சூழ்நிலையில், நாட்டின் தேசிய திட்டமாக, சுகாதாரத் துறைகள் எல்லா இடங்களிலும் இதையே செய்கின்றன.– என்றார். (5)

# தொழில் சட்டங்களில் மறுசீரமைப்பை சர்வதேச அமைப்பேதும் கோரவில்லை

## என்கிறார் மனுஷ நாணயக்கார



சர்வதேசநாணயநிதியம், சர்வதேச தொழிலாளர் அமைப்பு அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அரசாங்கம் நாட்டின் தொழில் துறை சட்ட மறுசீரமைப்புக்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை.

நூறுவருட பழைமைவாய்ந்த இந்த சட்டத்தை சர்வதேச சட்டத்துக்கு ஏற்றவகையில் திருத்தம் மேற்கொள்வதே எமது நோக்கமாகும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கையில் ,தற்போது நடைமுறையிலுள்ள தொழில் சட்ட மறுசீரமைப்புக் கான கலந்தாய்வுக் குழு கூட்டத்தின் மூன்றாவது அமர்வு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

புதிய தொழில் சட்டம் தொடர்பில் இதுவரை எந்த ஆவணமும் வெளியிடப்படவில்லை. இந்நிலையில் தேவையற்ற வகையில் விமர்சனங்களை மேற்கொண்டு ஊடக சந்திப்புகளை சிலர் நடத்துகின்றனர்.

இதனால் எந்தப் பலனுமில்லை. இதற்கு முன்னதாக தொழில் அமைச்சில் நிறுவப்பட்டிருக்கும் பொது மக்கள் கருத்தறியும் பிரிவுக்கு வந்து உங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்குமாறு தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளை கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சங்கங்கள் போராடி பெற்ற உரிமைகள் மற்றும் தொழிலாளர்கள் சார்பில் அரசியல் ரீதியில் பெற்ற தொழில் உரிமைகள் தற்போதைய சட்டத்தில் உள்ளன. ஆனால் அவற்றில் பல நடைமுறையில் இல்லை.

தொழிலாளர்கள் வழமைபோன்று அழுக்கான தொழிலாளர்களாக, வறுமைக்கு உட்பட்ட தொழிலாளர்களாக தொடரக்கூடாது. அவர்கள் நவீன உலகத்திற்கு ஏற்ற அனைத்து வளங்களைக் கொண்ட ஊழியர்களாக செயல்பட வேண்டும் என்ற இலக்குடன் இந்த சட்ட மறுசீரமைப்பை முன்னெடுக்க இருக்கிறோம்.

அத்துடன் எமது நாட்டின் தொழில் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளுமாறு சர்வதேச தொழில் அமைப்பு அல்லது வேறு எந்த சர்வதேச அமைப்புகளும் தெரிவித்ததில்லை. நாடு என்ற வகையில் நாங்கள் 74,75 வருடங்கள் குற்றசாட்டுக்களை தெரிவித்து வருகின்றோமே தவிர, அடுத்த கட்ட பயணம் தொடர்பில் சிந்திப்பதில்லை.

புலம்பெயர் தொழிவாளர்களின் நலனை முன்னிலைப்படுத்திய விடங்கள் தொழில் சட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டும். அதே போன்று பெண்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரப்பிரச்சினைக்குதீர்வை வழங்கக்கூடிய வகையில் பெண் தொழிலாளர்கள் தொடர்பிலான சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியம். அவர்கள் தொழில் துறைகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வாக பாலின சமத்துவத்தைப் பாதுகாக்க வேண் டும். தொழில் துறைகளில் பெண்களுக்கும் இரவு நேர தொழில் உரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்தவிடயத்தில் தற்போதுள்ள சட்ட குறைபாடுகள் நீக்கப்படவேண்டும். இன்று பல சம்பள நிர்ணய சபைகள் உள்ளன. இவை அனைத்தையும் ஒன்றிணைத்து தேசிய சம்பள சபையை அமைக்கலாம். பல்கலைக்கழகங்களில் படிக்கும்போதே பகுதி நேர தொழில் வாய்ப்புகளில் ஈடுபட வெளிநாடுகளில் மாணவர்களுக்கு வசதி உண்டு. இங்கும் அந்த வசதியை சட்டப்படி மாணவர்களுக்கு வழங்கவேண்டும்.

தொழிலாளர் மற்றும் தொழில் வழங்குநர் ஆகிய இருதரப்பையும் கவனத்தில் கொண்டு தற்போது மேற்கொள்ளப்படும் இந்த சட்ட மறுசீரமைப்புக்கும் நாட்டை 2048 ஆம் ஆண்டில் வளர்ச்சி கண்ட நாடாக மேம்படுத்தும் இலக்கை அடைவதற்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்றார். (5)

# மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் சமுர்த்தி வங்கியை கொண்டுவர முடிவு

## ஆராய்வதற்கும் குழு



சமுர்த்தி வங்கியை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு உரிய வழிமுறைகள் மற்றும் முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான குழுவில் நிதி அமைச்சு, மத்திய வங்கி, சமூக நலன்புரி நன்மைகள் சபை மற்றும் ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதனை நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (5)

# நீண்ட கால இடைவெளிக்கு பின் இலங்கை ரூபா பெறுமதி மாற்றம்

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று (வியாழக்கிழமை) அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் விலை 299.21 ரூபாவாகவும், விற்பனை விலை 312.37 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதற்கிடையில் நேற்றைய தினம் அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் விலை 302.42 ரூபாவாகவும், விற்பனை விலை 316.18 ரூபாவாகவும் பதிவாகியிருந்து.

நீண்ட தரவுகளின்படி இறுதியாக 2022 ஏப்ரல் 6 ஆம் திகதி 300 ரூபாவை விட குறைவாக அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதி பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது, (5)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான அனைத்து உரிமைகளும் சட்டத்துக்கமைய உறுதிப்படுத்தப்படும்

## அரசாங்கம் உறுதி

நாட்டின் தொழிலாளர் சட்டத்துக்கு உட்பட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும் என மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் கீழ் இயங்கும் பெருந்தோட்ட நிறுவனங்களான ஜனவசம, பெருந்தோட்ட யாக்கம் உள்ளிட்டவற்றின் தொழிலாளர்கள் நீண்ட காலமாக தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், வேலுகுமார் மற்றும் சுஜித் சஞ்சய் பெரேரா ஆகியோர் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரணவை அமைச்சில் சந்தித்து தெளிவுபடுத்தியுள்ளனர். இந்த சந்திப்பிலேயே அவர்களால் மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ள அமைச்சர் ரமேஷ் பத்திரண, மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் அனைத்தும் உடனடியாக தீர்க்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் –

அரசாங்கத்தின் கீழ் இயங்கும் ஜனவசம, பெருந்தோட்ட யாக்கம் தோட்டம் என்பவற்றில் உள்ள தொழிலாளர்கள் தொடர்ச்சியாகக் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். காணி அபகரிப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் இங்கு நீண்ட காலம் தீர்க்கப்படாமல் உள்ளன.

இந்த பெருந்தோட்ட கம்பனிகளின் கீழ் இயங்கும் தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு கடந்த 15 ஆண்டுகளாக ஊழியர் சேமலாப நிதியம் வழங்கப்படாமல் உள்ளது. மவுன்ஜின், கலபொட, மாவில, ரொக்வூட் போன்ற பிரதேசங்களில் உள்ள காணிகள் வெளியாள்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அங்குள்ள பெருந்தோட்ட மக்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை.

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சருக்கு தெளிவுபடுத்தப்பட்டது. அத்தோடு கம்பஹா மாவட்டத்தில் ஜனவசம பெருந்தோட்டக்கம்பனியின் கீழ் காணப்படும் ஒரு தோட்டத்தை விற்றேனும் அந்த பணத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாகசேனை, கந்தலோயா, மாவில, கலபொட, றொக்வூட் போன்ற பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு தலா ஓர் ஏக்கர் வீதம் குத்தகைக்கு வழங்க வேண்டும் என்றும், இதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. – என்றார். (5)

# பெருமளவிலான போதைப் பொருள்களுடன் பல நாள் மீன்பிடி கப்பல்; 6 பேர் கைது!

தென் கடற்பரப்பில் பெருமளவிலான போதைப் பொருள்களை ஏற்றிச் சென்ற பல நாள் மீன்பிடிக் கப்பலுடன் 06 சந்தேக நபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினரும் இலங்கை கடற்படையினரும் இணைந்து நடத்திய விசேட நடவடிக்கையின் மூலம் அவர்கள் குறித்து செய்யப்பட்டுள்ளனர்.

விசேட தேடுதல் நடவடிக்கையில், பெருமளவிலான போதைப்பொருள்களை ஏற்றிச் சென்ற பலநாள் மீன்பிடி கப்பலுடன் 06 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று (வியாழக்கிழமை) போதைப் பொருள் ஏற்றிச்சென்ற பலநாள் மீன்பிடிக் கப்பல் மற்றும் சந்தேகநபர்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுகத்துக்குக் கொண்டு வரப்படவுள்ளனர். (5)



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மத நல்லிணக்கம் என்பது என்ன?

**ஜெரோம் போதகரின் விவகாரம்தான் நாட்டில் இப்போது சூடான பேசு பொருள். ஏனைய மதங்களை இழிவுபடுத்தும் வகையில் அவர் பேசினார் என்று கூறப்படுவது தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. பல்வேறு தரப்புக்களும் அறிக்கைகளையும் கண்டனங்களையும் விடுக்கின்றன. அவர் கைது செய்யப்படவேண்டும் என்கிற குரல்கள் எழுகின்றன. அவர் நாட்டுக்குள் வந்தால் உடன் கைது செய்யப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி விசாரிக்குமாறு அரசுத் தலைவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டிருக்கின்றார்.**

**இவை எல்லாமே ஜெரோம் போதகரின் கருத்து மதங்களிடையே நல்லிணக்கத்தைக் குலைக்கும் வகையில்அமைந்துள்ளனஎன்கிற குற்றச்சாட்டுக்கான பிரதிபலிப்பாக அமைந்துள்ளன. இந்த விடயத்தில் அவருக்கும் தமக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை என்று கைகழுவியுள்ள கத்தோலிக்கத் திருச்சபை, தவறான புரிதல் காரணமாக தாம் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படுவது குறித்தும்கவலைதெரிவித்துள்ளது. கத்தோலிக்கத் திருச்சபையின் இந்த நிலைப்பாடு புதியதல்ல. மதமாற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலும் கத்தோலிக்கத் திருச்சபை பழியை கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவத் திருச்சபைகளின் மேல் சுமத்துவதும் அதற்கும் தமக்கும் தொடர்பேயில்லை என்று தெரிவிப்பதும் வழக்கம்தான். இப்போதும் அதுவே நிகழ்ந்துள்ளது.**

**அது தவிர பௌத்த அமைப்புக்களிடம் இருந்தும் பிக்குகளிடம் இருந்துமே கடுமையான கண்டனங்களும் வீர வசனங்களும் இது விடயத்தில் வெளிவந்திருக்கின்றன. அதிலும் நீதிமன்ற அவமதிப்புக் குற்றவாளியான ஞானசார தேரர் இன்னும் அதிகம் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார். கடும்போக்கு அரசியல்வாதிகளும் அதிகளவில் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.**

**ஜெரோம் போதகரின் கருத்துக்கள் நாகரிக உலகின் போக்குக்குஏற்புடையதல்லத்தான். ஏனையமதங்களைத் தாழ்த்தித் தனது மதத்தை உயர்த்திப் பேசுவது ஒருபோதும் ஏற்புடையதல்ல. மக்களாட்சித் தத்துவத்தின் கீழ் எவரும் எந்த மதத்தையும் பின்பற்றுவதற்கு உரித்துடையவர். இதில் எந்த மதமும் உயர்வுடையதல்ல. அதுவும் இது பௌத்த நாடு, இங்கே பௌத்தத்துக்கே முன்னுரிமை, சிறப்புரிமை என்றெல்லாம் பேசும் ஒரு நாட்டில் அதனால் கடுமையான பாதிப்புக்களையும் சிரமங்களையும் எதிர்கொள்ளக்கூடிய சிறுபான்மை மதமாக இருக்கக்கூடிய ஒரு மதத்தைச் சேர்ந்த போதகர் அர்த்தமற்ற வகையில் இவ்வாறு பேசுவது ஒருபோதும் ஏற்புடையதல்ல.**

**அதே நேரம் போதகர் செய்த குற்றத்திற்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல அதற்கு எதிர்வினையாற்றும் பிக்குகள் தெரிவிக்கும் கருத்துக்களும். அதிலும் போதகரின் கருத்து மத நல்லிணக்கத்தைக் கெடுக்கிறது என்று அவர்கள் துள்ளிக் குதிப்பது வேடிக்கையாக இருக்கின்றது. நாட்டில் பௌத்த மத குருக்கள் மற்றைய மதத்தவர்களோடு எப்போது நல்லிணக்கத்தைக்கடைப்பிடித்திருக்கிறார்கள்? ஒவ்வொரு காலத்திற்கு ஒவ்வொரு மதத்துடன் முரண்படுவதையே வழக்கமாகக் கொண்டிருப்பவர்கள் ஏனையோர் மத நல்லிணக்கத்தைக் குலைத்துவிட்டார்கள் என்று கூக்குலிடுவதுஏற்புடையதல்ல. மதநல்லிணக்கம்என்பது எல்லா மதங்களும் சேர்ந்து கடைப்பிடிக்கவேண்டியதொன்று. மற்றைய மதங்கள் ஒரு மதத்திற்கு அடிபணிந்து கடைப்பிடிக்கவேண்டிய ஒன்றல்ல.**

**பிக்குகள் மற்றைய மதங்களினதும் மதத் தலைவர்களினதும் தவறுகளைக் கண்டிப்பதற்கு முன்னர் தாம் மற்றைய மதத்தவர்களின் உணர்வுகள் புண்படாமல் நடந்துகொள்கின்றனரா என்பதில் கவனம் செலுத்தவேண்டும்.**

# அரசு தன்னிச்சையாக செயற்பட முடியாது தனிநபர் பிரேரணையை சமர்ப்பிக்க முடிவு

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



பொருளாதார மறுசீரமைப்புக்களில் மக்களின் பங்களிப்பும், அவர்களது விருப்பமும் காணப்பட வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாடாகவுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் அரசாங்கத்தால் தன்னிச்சையாக செயற்பட முடியாது. இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையை சமர்ப்பிக்க தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு ஒப்பந்த விவகாரத்தில் குறுகிய அரசியல் நோக்கங்களுடன் நாம் செயற்படமாட்டோம்.

அந்த வகையில் கடந்த திங்களன்று நாணய நிதிய தூதுக்குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பில் ஊழல், மோசடிகளை ஒழித்து நாட்டை அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்வது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

எனினும் அரசாங்கத்தின் தற்போது பொருளாதார மேம்பாட்டு கொள்கை திட்டத்தில் பொருளாதார வளர்ச்சி வேகம் 3 சதவீதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

3 வீதம் வளர்ச்சி வேகத்தைக் கொண்டு எதனையும் செய்ய முடியாது. அதேவேளை மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் நிபந்தனைகளிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பொருளாதார மறுசீரமைப்புக்களில் மக்களின் பங்களிப்பும், அவர்களின் விருப்பமும் காணப்பட வேண்டும் என்பதே நாணய நிதியத்தின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

நாட்டை ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டங்களுக்குஅப்பால் மக்கள் ஆணை கொண்ட அரசாங்கம்காணப்படவேண்டும் என்பதே இதன் பொருளாகும். எனவே மறுசீரமைப்பு விவகாரங்களில் அரசாங்கத்தால்தன்னிச்சையாகசெயற்பட முடியாது. இதனை வலியுறுத்தும் வகையில் நாடாளுமன்றத்தில்தனிநபர்பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்படும்.

அத்தோடு நான்கு ஆண்டுகள் நீடிக்கப்பட்ட கடனுதவி திட்டத்தை வழங்குவதன் மூலம் இலங்கையில் நாணய நிதியம் எதிர்பார்க்கும் மாற்றம் என்ன என்பதுதெளிவில்லாமலுள்ளது என்பதையும் அவர்களிடம் நேரடியாகத் தெரிவித்தோம்.
–என்றார். (5)

# கிழக்கு ஆளுநர் நியமனம் நல்லிணமக்கம் ஏற்படுவதற்கான சிறந்த சமிக்ஞை ஆகும்!

## அமைச்சர் ஜீவன் நம்பிக்கை



தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஒரே தடவையில் தமிழ் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையானது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும்.

அதேபோல நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சமிக்ஞையையும் இதன்மூலம் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூன்று ஆளுநர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு –

தமிழ்பேசும்மக்கள்செறிந்துவாழும்பகுதிகளுக்குதமிழ்ஆளுநர்களைநியமிக்குமாறு தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம்கோரிக்கைகளைமுன்வைத்துவந்தனர். மக்களின்கோரிக்கையும்அதுவாகவே இருந்தது. அந்தகோரிக்கையை ஜனாதிபதி நிறைவேற்றியமை வரவேற்கதக்கது.

வடக்கு மாகாணத்தில் தமிழ் ஆளுநர்கள் பதவி வகித்தபோதும் கிழக்கு மண்ணுக்கு முதன் முறையாக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டமையும் மகிழ்ச்சி. அதுவும் இலங்கைதொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அந்த பதவிக்கு வந்திருப்பது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக அமைந் துள்ளது.

நாட்டில் மாகாணசபைகளில் தற்போது மக்கள்பிரதிநிதிகள் இல்லை. எனவே, நிர்வாகம் என்பது ஆளுநர் வசமும், பிரதம செயலாளர்கள் வசமும்தான் உள்ளன.

எனவே, கிழக்கு மாகாணத்தில் சிறந்த சேவையை புதிய ஆளுநர் வழங்குவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. அவர் மூலம் சிறந்த சேவையை பெற்றுக்கொள்ளுமாறு மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

செந்தில் தொண்டமான் மாகாண சபை உறுப்பினராக, அமைச்சராக, பதில் முதல்வராக பதவி வகித்துள்ளார். ஆக மத்திய அரசுக்கும், மாகாண அரசுக்கும் இடையில் ஏற்படும் நெருக்கடிகளை எப்படி சமாளிப்பது என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆகவே, சிறப்பான சேவைகள் இடம்பெறும் என்ற நம்பிக்கை உள்ளது.
– என்றார். (5)

# கொழும்பில் பணிபுரிந்த யாழ்ப்பாண இளைஞனை 7 மாதங்களாக காணவில்லை என முறைப்பாடு!

## மக்களின் உதவியை நாடியுள்ள தாயார்



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரொருவர் கொழும்பில் வேலைசெய்துகொண்டிருந்த நிலையில் காணமல் போயுள்ளார்.

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை மயிலிட்டி தாளையடி வீதியைச் சேர்ந்த சிவகுமார் பிந்துசன் என்ற 29 வயதான இளைஞரே கொழும்பு புறக்கோட்டையில் வேலை செய்து கொண்டிருந்த நிலையில் காணாமல் போயுள்ளார்.

இளைஞன் காணாமல் போனமை தொடர்பாக 2022.10.13 அன்று பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் பதிவு செய்தும் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை என இளைஞனின் தாயார் சிவகுமார் காந்திமதி தெரிவிக்கின்றார்.

மனநிலை பாதிக்கப்பட்ட குறித்த இளைஞன் அதற்குரிய சிகிச்சைகளையும் பெற்றுக்கொண்டிருந்தார் எனக் கூறும் தாயார் எழு மாதங்களாக தேடியும் குறித்த இளைஞனை கண்டுபிடிக்க இயலாத நிலையில் ஊடகங்களை நாடுவதாகத் தெரிவித்தார்.

குறித்த இளைஞன் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் 0775988204, 0775547218 என்கிற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (5)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் மன்னார் மாவட்டத்திலும் உணர்வெழுச்சி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் மன்னார் மாவட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இன்று (வியாழக்கிழமை( காலை 8 மணியளவில் மன்னார் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது,

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மத தலைவர்கள் பொது மக்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.

இதன்போது இறுதியுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது, (5)



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்


























இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.05.2023 இல் வெளியிடப்பெற்றது.